வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 22.08.2022 திங்கட்கிழமை இதழ் : 258 பக்கங்கள் : 16

## இருண்ட நாளை ஏற்படுத்தாதீர்கள்! ஜனாதிபதிக்கு ஐ. நா. எச்சரிக்கை!!

ஜெனிவா, ஓக. 22

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அமைப்பாளர் வசந்த முதலிக மற்றும் இருவரின் தடுப்பு காவல் உத்தரவில் கையொப்பமிட வேண்டாம். அவ்வாறு செய்வது இலங்கைக்கு ஓர் இருண்ட நாளாக இருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுள்ளார் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர்.

இது தொடர்பில் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது,

“மனித உரிமைகள் பாதுகாவலர்களான வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த, கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோர் இலங்கையின் பயங்கர 15



## நாட்டின் நெருக்கடிகளுக்கு நானும் பொறுப்பாளியே!

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

கொழும்பு, ஓக. 22

நாட்டின் அனைத்து நெருக்கடிகளுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பல்ல. இதற்கு நான் மற்றும் முந்தைய அரசாங்கங்கள் உட்பட அனைவரும் பதில் சொல்ல வேண்டும் - இவ்வாறு வெளிப்படையாகக் கூறியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ 15

# முடிந்தால் வேலை செய்யுங்கள்! இல்லையேல் வீடு செல்லுங்கள்!!

## அரச ஊழியர்கள்மீது ஜனாதிபதி காட்டம்



அநுராதபுரம், ஓகஸ்ட் 22

**“வேலை செய்ய முடிந்தால் வேலை செய்யுங்கள், முடியாவிட்டால் வீட்டுக்கு செல்லுங்கள் நாங்கள் வேலை செய்யாமல் பணம் வழங்கத் தயாராக இல்லை” - இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

“கீழ்மட்டத்தில் ஏராளமான அரச அதிகாரிகள் உள்ளனர். ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு சுமார் 9 அதிகாரிகள் இருக்கின்றனர் என்று நான் நினைக்கிறேன். எல்லோரும் வேலை செய்ய முடிந்தால் வேலை செய்யுங்கள். முடியாவிட்டால் வீட்டுக்கு செல்லுங்கள். நாங்கள் வேலை செய்யாமல் பணம் வழங்கத் தயாராக இல்லை. ஏனென்றால் நாங்கள் 15



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கைலாச வாகனத் திருவிழாவில்....! படம் – ஐ. சிவசாந்தன்

## துப்பாக்கி சூடு; இருவர் மரணம்!

கொழும்பு, ஓக. 22

நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும், இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலி - அம்பலாங்கொடை - தெல்துவ பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹோட்டலின் மேல் மாடியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரூ.340 ஆக உயர்ந்தது மண்ணெண்ணெய்!

கொழும்பு, ஓக. 22

வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 340 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 15

## உணவின்றி மணல்தீடையில் பரிதவித்த இலங்கையர் மீட்பு!

இராமேஸ்வரம், ஓக. 22

படகு மூலம் அகதிகளாக இந்தியா சென்ற இரண்டரை மாதக் கைக் குழந்தை உட்பட்ட இலங்கையர்கள் எண்மர் மூன்று நாட்களாக உணவின்றி தமிழகத்தின் மூன்றாவது மணல் தீடையில் பரிதவித்த நிலையில் இந்திய கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கிளிநொச்சியைச் சேர்ந்த இவர்கள் 15

## அமெரிக்க சட்டத்தை மீறினார் கோட்டாபயமீது வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஓக. 22

அமெரிக்காவின் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷமீது அந்த நாட்டின் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

2019ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியுரிமையை கோட்டாபய ராஜபக்ஷ துறப்பதற்கு முன்னர் நடந்த பல சம்பவங்களை அடிப்படையாக வைத்து இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள 15

## ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தில் சீனாவின் கடன் தாக்கம் செலுத்தும்!

கொழும்பு, ஓக. 22

வெளிநாடுகளிடம் இலங்கை பெற்ற கடனில் சுமார் அரைவாசி சீனாவிடமிருந்தே பெறப்பட்டது. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) ஊழியர் மட்டத்திலான ஒப்பந்தத்தை எட்டுவதில் சீனாவின் நிலைப்பாடு முக்கியமானதாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

நடப்பு மாதமான ஓகஸ்டில் நிதி அமைச்சின் கடன் வழங்குநர் பட்டியலின் இற்றைப்படுத் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை குறித்துக் கவலை தெரிவித்திருந்தேன்.

போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்திருப்பது, தற்கொலைகள் அதிகரித்திருப்பது பற்றி எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்போது, இந்த விடயத்தில் மருத்துவர் யமுனா னந்தா போன்ற ஒரு சிலர் அவ்வப்போது கட்டுரைகளை எழுதுவதோடு நின்றுவிடுகின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்றைய பத்திரிகையில் எனது அந்த மனக்குறையை- மனக்குமுறலை, பெரியவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் சுட்டிக்காட்டி நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமையைக் காணமுடிந்தது.

அந்த அறிக்கையில் அவர்,

"போதைவஸ்து பிரச்னைகள் தொடர்பாக யாழ். பிராந்தியத்துக்கு பொறுப்பாக இருக்கின்ற பொலிஸ் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள் தடுத்து நிறுத்தும் வழிமுறைகளை கையாளாது காலம் கடத்தினால் பெரிய ஆபத்தை எங்கள் பகுதி சந்திக்கும் என்பதில் ஐயமில்லை" - இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அவருடைய எச்சரிக்கை நியாயமானதுதான். ஆனால், சமூக அமைப்புக்களின் தலைவர்கள் என்று அவர் சுட்டி நிற்கும் தலைவர்களில் அவரும் ஒருவர் என்பதை இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

இந்த சமூகத்தில் மதிப்பும் மரியாதையையும் கொண்டிருக்கின்ற சமூகத் தலைவர்களில் அவர் முதன்மையானவர். அவரே இந்த விடயத்தில் மக்களை நல்வழிப்படுத்தவும், இந்த அவலத்திலிருந்து சமூகத்தைத் தூக்கிநிறுத்தவும் அதற்கான பணியை செய்யவும் பொருத்தமானவர்.

இந்தவேளையில் அண்மையில், நமது அயல்நாடான இந்தியாவின் தமிழக மாநிலத்தில் போதைப்பொருளின் பாவனை அதிகரிப்புக்கு எதிராக மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதை அறிய முடிகின்றது.

தமிழகத்தில் கஞ்சா போன்ற போதைப் பொருள்களின் விற்பனை அதிகரித்திருப்பதும் அவற்றைப் பயன்படுத்துவோர் - குறிப்பாக இளைய சமுதாயத்தினரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் வேதனையளிப்பதாக தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின், போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

அவற்றில், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு என்ற பிரிவு ஒன்று பொலிஸ் திணைக்களத்தில் உருவாக்கப்படும், போதைப்பொருள்களை விற்பனை செய்வோர் கைது செய்யப்பட்டு அவர்களின் சொத்துகள் முடக்கப்படும் போன்ற அறிவிப்புக்கள் முக்கியமானவை. போதைப் பொருள்கள் தடுப்பு குறித்து மாவட்ட ஆட்சியர்களுடனும் பொலிஸாருடனும் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது, போதைப் பொருள்களைத் தடுப்பதற்கான மேலும் பல ஆலோசனைகளையும் முதல்வர் வழங்கியிருக்கிறார்.

அடுத்தடுத்து தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் போதைப் பொருள்கள் தடுப்பு மாநாடு, பாடசாலைகள், கல்லூரிகளில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு உறுதிமொழி என போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழக அரசு முடுக்கிவிட்டுள்ளது.

நாம் என்ன செய்வது?, அதிகாரம் போதுமானதாக இல்லாவிட்டாலும், மாகாண சபைகள் வினைத்திறனுடன் இயங்குவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் அந்த மாகாண சபைகள் ஊடாக இது குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளையாவது செய்திருக்கலாம்.

இப்போதுகூட முடியாது என்பதல்ல. சமூகத்திலுள்ள நிறுவனங்களும், நம் மத்தியிலுள்ள ஆலயங்கள், தேவாலயங்கள், வாசிகசாலைகள் என்று ஒவ்வொன்றும் இந்த சமூகசீர்கேட்டுக்கு எதிராகக் களம் இறங்கி பணிசெய்ய முன்வந்தால் முடியாதது என்று இல்லை.

முன்னர் சொன்னதுபோல, கட்டுரைகள் எழுதுவதோடு நமது பணி முடிந்தவிட்டது என்று இருக்காமல், ஒவ்வொருவரும் தத்தமக்கு- தமது சக்திக்கு உட்பட்டு .ந்த விடயத்தில் காரியமாற்றவேண்டும்.

ஆகக்குறைந்தது, போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக மக்கள், இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியிலாவது ஈடுபடவேண்டும்.

- ஊர்க்குருவி.

# கூடுதல் கட்டணம் வசூலித்த பேருந்துகள்மீது நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 22

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலித்த நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இந்த பஸ்கள் அடையாளம் காணப்பட்டன என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக பணத்தை வசூலித்தமை, கட்டண விவரங்களை காட்சிப்படுத்தாமை, பயணச்சீட்டுக்களை வழங்காமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதற்கு இணையாக வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபையால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோட்டாபயவின் வீட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 22

நாட்டை விட்டு வெளியேறி தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானை வீட்டுக்கும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை திரும்பவுள்ளார். இந்த நிலையிலேயே அவருக்கான பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 22

வாராந்தம் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 1,500 வரை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகினர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தை தவிர கண்டி, இரத்தினபுரி, கேகாலை, காலி ஆகிய மாவட்டங்களிலும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர்.

டெங்கு, கொரோனா மற்றும் இன்புளுவென்சா போன்ற நோய்கள் தற்போது பரவி வருவதால், நோய்க்கான அறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் உரிய மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் மக்களை டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு கேட்டுள்ளது. (ஐ)

## தமிழ் அரசியல் கைதிகளில் சிலர் முதல்கட்டமாக விடுதலையாவர்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ உறுதி

கொழும்பு, ஓக. 22

"முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்."

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

"தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

இதற்கமைய முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும். அவற்றுள் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒன்று. இதனைக் கருத்தில்கொண்டு அரசு செயற்படும்" - என்றார். (ஐ)

# களவாடப்பட்ட மாட்டைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த மக்கள்



தென்மராட்சி, ஓக. 22

திருட்டு மாட்டை கொண்டு சென்ற இருவர் தப்பியோடிய நிலையில் பொதுமக்கள்மாட்டை மீட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர்.

மீசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மீசாலை வடக்கு எல்லை வீதியால் பசு மாடொன்றை இருவர் நடத்திக் கொண்டு செல்வதைக் கண்ட ஊரவர்கள் யாருடைய மாடு எங்கே? கொண்டு போகிறீர்கள்? என்று விசாரித்துள்ளனர்.

இந்நிலையில், மாட்டைக் கொண்டுவந்தவர் அவர்களுக்கு பதிலளிக்காமல் அதனை அங்கேயே விட்டுவிட்டு சைக்கிளில் வந்த மற்றவருடன் சேர்ந்து ஓடித் தப்பியுள்ளனர்.

மாட்டைப் பிடித்த ஊரவர்கள் அதனை கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர். பின்பு அந்த மாடு மந்துவிலை சேர்ந்த பெண்ணொருவருடையது என்று தெரிய வந்தது. அந்தப் பெண் சனிக்கிழமை காலை தனது மாட்டைப் பெறுவதற்காக சென்று காத்திருந்த நிலையில், மாலைவேளையே மாடு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாடுகள் தொடர்ந்து திருடப்படுவதால் அதிர்ச்சியடைந்துள்ள கால்நடை வளர்ப்பாளர்கள், திருடர்களை கண்டு பிடிப்பதில் பொலிஸார் அசண்டையீனமாக செயல்படுகின்றனர் என்று சாடியுள்ளதுடன், திருடர்களை பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
22.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம்?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் விரைவில் இடம்பெறவுள்ளது. நீண்டகாலமாக மத்திய குழுக் கூட்டம் இடம்பெறவில்லை. பல்வேறு காரணங்களைக் கூறி கூட்டம் பிற்போடப்பட்டிருந்தது. தமிழ் அரசுக் கட்சியின் கட்டமைப்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும். கட்சியின் தலைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் - என்றவாறான அபிப்பிராயங்கள் பரவலாக உள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கென ஒரு தனித்துவமான வரலாறுண்டு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள், 1949இல் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கினார். அதுவரையில் தமிழ் மக்களுக்கான ஒரேயொரு கட்சியாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டுமே இருந்தது. தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறியே செல்வநாயகம் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கியிருந்தார். இதன் பின்னர், தமிழ் மக்களின் ஒரேயொரு தமிழ்த் தேசிய தலைமையாக இலங்கை தமிழ் அரசு கட்சி மட்டுமே நோக்கப்பட்டது. எனினும், புதிதாக எழுச்சியுற்ற தமிழ்த் தேசிய அரசியல் போக்கைக் கையாள்வதற்கு தமிழ் அரசுக் கட்சியின் பொருத்தப்பாடு தொடர்பில் கேள்வியெழுந்தபோது, செல்வநாயகம் புதிய கூட்டணி தொடர்பில் சிந்திக்கப் பின்நிற்கவில்லை. இந்த இடத்தில் செல்வநாயகம் ஒரு தனித்துவமான தலைவராக வெளித்தெரிந்தார். தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கினார்.

1970களுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் போக்குக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிலையிலேயே, 1972இல் தமிழர் ஐக்கிய கூட்டணியை உருவாக்கினார். அதுவே பின்னர் தமிழர் விடுதலை கூட்டணியாக அடையாளப்படுத்தப்பட்டது. ஆயுத இயங்கங்கள் எழுச்சியுற்ற பின்னணியில் மிதவாத அரசியல்மீதான மக்களின் ஆர்வம் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. ஆரம்பத்தில் பல இயங்கங்கள் இருந்த நிலைமை மாறி விடுதலைப் புலிகள் ஒரேயோர் இயக்கமாக எழுச்சியுற்றனர். இந்தப் பின்னணியில், தமிழ் மிதவாத இயக்கங்கள் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்தன. இதன் பின்னர் தமிழ் மிதவாத அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விடயமாகவே இருக்கவில்லை.

நோர்வேயின் தலைமையிலான சமாதான முன்னெடுப்புக்களின்போதுதான், மீளவும் தமிழ் அரசு கட்சியைப் பயன்படுத்தும் எண்ணம் உருவாகியது. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணியை தொடர்ந்தும் பயன்படுத்துவதில் நெருக்கடிகள் ஏற்பட்டமையைத் தொடர்ந்தே, அதுவரையில் கிடப்பில் போடப்பட்டிருந்த தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் மீளவும் பயன்பாட்டுக்கு வந்தது. சைக்கிள் சின்னத்தின் கீழிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸை ஒரு கட்சியாகப் பயன்படுத்த விடுதலைப் புலிகளின் தலைமை விரும்பியிருக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பயன்பாடு உணரப்பட்டது. கவனிப்பாரற்றிருந்த தமிழ் அரசு கட்சியின் வீட்டு சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமானது.

தமிழ்த் தேசிய அரசியலை வீரியமாக முன்னெடுக்க வேண்டுமாயின், தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியில் நிற்க வேண்டுமென்னும் கோரிக்கை பரவலாக முன்வைக்கப்பட்டது. ஆனாலும், சம்பந்தன் இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் சம்பந்தனுக்கு பிற்பட்ட காலத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் எதிர்காலம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் இரண்டுமே ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில்தான், தமிழ் அரசு கட்சியை பலப்படுத்த முடியுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் அரசு கட்சி அதிக மக்கள் ஆதரவை பெற்றிருக்கின்றது. எனினும், அதன் தலைமைத்தும் மற்றும் புதியவர்களை உள்வாங்குவது தொடர்பில் கட்சியில் தெளிவான நிலைப்பாடு இல்லை.

தமிழ் அரசு கட்சியின் அடுத்த தலைமைத்துவத்திலேயே அனைத்தும் தங்கியிருக்கின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தோல்வியிடைந்திருந்தார். ஒரு தலைவர் என்னும் வகையில் அவர் தோல்வி அடைந்துவிட்டார். இந்தப் பின்னணியில் அடுத்த தலைவர் யார்? புதிய தலைமைத்துவத்திலும் அதன் அரசியல் வேலைத் திட்டங்களிலும்தான கட்சியின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. எவரும் தலைவராகலாம் ஆனால், அவர் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட கூடியவராகவும் நெருக்கடிகளை சமாளித்து கட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்லக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், சம்பந்தனுக்கு பிற்பட்ட தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம்.

# ஒரு கருணை கொலையும் வலுத்துவரும் எதிர்ப்பும்!

*கடந்த ஜூலை மாதத்தின் மத்தியில் 600 கிலோ எடை கொண்ட பனிக் கடல் யானை எனப்படும் வால்ரஸ், நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவின் - பிஜோர்ட் நகரில் தென்பட்டது. இதற்கு மக்கள் ஆசையாக வைத்த பெயர் ப்ரேயா.*

*சில நாள்களிலேயே இது மிகவும் பிரபலமடைந்தது. நட்சத்திர அந்தஸ்து கிடைத்தது. ஆங்காங்கே அது நகர்ந்து செல்லும், படகுகளில் ஏறும் காணொலிகள் பிரபலமா கின. இப்படிப் பிரபலமான ப்ரேயா இப் போது உயிருடன் இல்லை. பொதுமக்களுக்கு ஆபத்து என்று கருதி அரசு அதிகாரிகள் அதைக் கொன்றுவிட்டார்கள்.*



*மக்கள் இதை அப்படியே விட்டுவிடவில்லை. கொதித்துவிட்டார்கள். நோர்வே அரசாங்கம் வால்ரஸை கொலை செய்து விட்டது என்று மக்கள் குற்றம்சாட்டும் அளவுக்கு நிலைமை போய்விட்டது.*

*வேறு சிலர் இந்த உயிரினத்துக்குச் வெண்கலச் சிலை வைப்பதற்காக ஒன்லைனில் நிதி திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். சில நாள்களிலேயே 24 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் சேர்ந்து விட்டன.*

*மக்களின் சீற்றம் நோர்வேக்குள் மாத்திரம் முடங்கிவிடவில்லை. வெளிநாடுகளில் இருந்து கோபம் கொப்பளிக்கும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நோர்வேயின் பிரதமரே இது குறித்துக் கருத்துத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் என்ன சொல்வார்? ”பிரேயாவைக் கொன்றது சரியான முடிவுதான்” என்றார்.*

*இதற்கெல்லாம் மக்கள் சமாதானம் ஆகவில்லை. ப்ரேயாவை கொல்லாமல் காப்பாற்றியிருக்க முடியுமா என்று அவர்கள் இன்னும் கேட்கிறார்கள்.*

*ப்ரேயாவின் ஒஸ்லோ நோக்கிய பயணம் ஆர்ட்டிக் பெருங்கடலில் தொடங்கியது. கடந்த ஆண்டில் அது ஐரோப்பாவின் பல பகுதிகளில் தென்பட்டிருக்கிறது. பிரிட்டன், நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன் உள்ளிட்ட நாடுகளை ஒட்டிய கடல் பகுதிகளில் அதை மக்கள் பார்த்திருக்கிறார்கள்.*

*வால்ரஸ் சென்ற எல்லா இடங்களிலும் மக்களின் கவனத்தை ஈர்த்தது. ஆனால், நோர்வேயில் மக்கள் கவனத்தையும் தாண்டி அதிகாரிகளின் கவலையையும் அதிகரித்தது. ப்ரேயா வால்ரஸை பார்ப்பதற்காக கூடும் மக்கள் அதற்கு மிக அருகில் நின்று புகைப் படம் எடுப்பதைக் காண முடிந்து. ஒரு பெண்ணை நீருக்குள் துரத்துவது போன்ற செய்திகளும் வெளிவந்தன. கயாக்கில் சென்று கொண்டிருந்த ஒருவர் ப்ரேயா தன்னை நோக்கி வந்தபோது பதறிவிட்டதாகத் தெரிவித்தார்.*

*“வால்ரஸ்களின் நடத்தையை கணிக்க முடியாது” என்று கிறீன்லாந்து இயற்கை வளங்கள் தொடர்பான மூத்த விஞ்ஞானி எரிக் பார்ன் கூறுகிறார். ”முன்புறம் தெரியும் சிறு தந்தங்களைப் போன்ற உறுப்புகளைக் கொண்டு ஒரு சீலை பிடித்து அதைக் குத்திக் கொல்லும் திறன் கொண்டவை.”*

*வால்ரஸ் மக்களுடன் நெருக்கமாகிவிட்டதால் - அல்லது மக்கள் அதனுடன் நெருக்கமாகிவிட்டதால் - ஒரு பெரிய ஆபத்து இருந்தது.*

*“அரை தொன் எடையுள்ள வால்ரஸ் - கூர்மையான தந்தங்களுடன் - மக்களிடையே நீந்துவது மிகவும் ஆபத்தானது” என்று பார்ன் கூறுகிறார். இது தவிர வால்ரஸ்கள் நீரடி நீச்சல்காரர்களையும், சிறிய படகுகளையும் தாக்கும் என்று அறியப்படுகிறது.*

*வால்ரஸ்கள் தொலைதூர பகுதிகளில் வாழ்கின்றன. அவை பெரும்பாலும் மனிதர்களுடன் தொடர்பு கொள்வதில்லை. அதனால் அவை மனிதர்களைத் தாக்குவதில் ஆச்சரியமில்லை என்று கோபன்ஹேகன் வன விலங்கு காப்பகத்தின் விலங்கியல் இயக்குநரான மேட்ஸ் ஃப்ரோஸ்ட் பெர்டெல்சன் கூறுகிறார். இதன் பொருள் என்னவென்றால், அவை ”கடுமையான சேதத்தை” ஏற்படுத்தும் திறன் கொண்டவை என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.*

*ஆனால், இதற்கெல்லாம் வால்ரஸ் மீது மட்டுமே பழிபோட முடியாது என்கிறார் கனடாவைச் சேர்ந்த வால்ரஸ்கள் தொடர்பான அனுபவமுள்ள ஆர்ட்டிக் கடல் பாலூட்டி உயிரியலாளர் ஜெப் டபிள்யூ ஹிக்டன்.*

*“இந்த விசயத்தில் மனித நடத்தையும் கணிசமாக ஆபத்தை அதிகரித்தது” என்று அவர் கூறுகிறார். பார்வையாளர்களிடையே பொது அறிவு ஏன் இல்லை என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.*

*“அந்த விலங்கைப் பார்ப்பதற்காக குழந்தைகளைக் கூட்டிச் சென்றவர்கள், அவர்களையும் ஆபத்தில் தள்ளியுள்ளனர்.” என்கிறார் அவர்.*

*பிரேயாவை கருணைக்கொலை செய்வதைத் தவிர வேறு ஒரு சாத்தியமான மாற்றுவழியை நிபுணர்களுடன் விவாதித்தது நோர்வே மீன் வளத்துறை.*

*ஆனால் அப்படி எந்த வழியும் கிடைக்கவில்லை.*


*ப்ரேயாவுக்கு மயக்க மருந்து கொடுத்து எங்காவது கொண்டு சென்று விட்டுவிடலாம் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், மயக்க மருந்து கொடுக்க வேண்டாம் என்று நோர்வே கடல் ஆராய்ச்சிக் கழக அதிகாரிகள் முடிவு செய்தனர். மயக்க மருந்து கொடுத்தால் தண்ணீருக்குள் வால்ரஸ் மூழ்கி விடவோ, மறைந்து கொள்ளவோ வாய்ப்புள்ளது என்று அவர்கள் கருதினர்.*

*வால்ரஸின் உருவம் பெரியது. அதன் இரத்த நாளத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதும் சிரமம். அதனால் மயக்க மருந்து கொடுப்பதில் சிக்கல்களும் இருந்தன. இந்தத் திட்டம் மாத்திரமல்ல. ஒரு படகின் கீழ் வலையை வைத்து அதன் மூலம் ப்ரேயாவை பிடிக்கும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டது.*

*“இது ஒப்பீட்டளவில் அதிக ஆபத்தை ஏற்படுத்தும், ஏனெனில் வால்ரஸ் வலையில் எளிதில் சிக்கி பீதியடைந்து மூழ்கிவிடும்” என்று கடல் ஆராய்ச்சிக் கழகம் விளக்கியது.*

*இறுதியில் ப்ரேயாவை கொல்ல முடிவு எடுக்கப்பட்டது. வால்ரஸ் இப்போது இறந்துவிட்டது. ஆனாலும் அதன் பயணம் இன்னும் முடிந்துவிடவில்லை.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் வரவு உண்டாகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். மகிழ்ச்சியான நாள். திடீர் வரவால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்**
செயலில் தடுமாற்றம் உண்டாகும். தேவையான சமயத்தில் குடும்பத்தினர் ஒத்துழைப்பர். புதிய வழிமுறைகளைக் கையாள்வீர்கள். எதிரிகள் விலகுவர். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
செலவுகள் அதிகரித்தாலும் மறுபக்கம் உங்கள் தேவைகள் நிறைவேறி மகிழ்ச்சி அடைவீர்கள். புதிய முயற்சி வேண்டாம். மனதிற்கினிய சம்பவம் ஒன்று நடைபெறும். ஆதாயம் அடைவீர்கள்.

**கடகம்**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் ஏற்படும். வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். முயற்சி நிறைவேறும். எதிர்பாராத வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். லாபம் அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். இழுபறியாக இருந்த வேலைகள் இன்று நிறைவேறும்.

**கன்னி**
திட்டமிட்ட வேலைகள் நடந்தேறும். நீங்கள் ஈடுபடும் வேலையில் தடைகள் உண்டானாலும் இறுதியில் உங்கள் முயற்சி வெற்றியாகும். செயல்களில் எதிர்பாராத தடைகளை சந்திப்பீர்கள்.

**துலாம்**
யோசிக்காமல் எந்த செயலிலும் ஈடுபட வேண்டாம். உங்களுடைய முயற்சிகள் இன்று இழுபறியாகும். எதிர்பாராத பிரச்னைகள் தேடி வரும். வருமானத்திலும் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத இடத்தில் இருந்து பணவரவு வரும். பொன் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். முயற்சிக்கேற்ற லாபத்தை அடைவீர்கள். உறவில் இருந்த பிரச்னைகள் விலகும்.

**தனுசு**
நீங்கள் நினைத்ததை துணிச்சலுடன் சாதிப்பீர்கள். செல்வாக்கு உயரும். யோகமான நாள். எதிரிகள் விலகிச் செல்வர். திட்டமிட்டு செயல்பட்டு உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
உழைப்பு அதிகரிக்கும். முயற்சியில் பின்னடைவு ஏற்படும். பிள்ளைகளால் சங்கடம் வரலாம். அலைச்சல் அதிகரிக்கும். செலவு செய்தும் நினைத்ததை சாதிக்க முடியாமல் சோர்வடைவீர்கள்.

**கும்பம்**
தாய்வழி உறவினர் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். கடும்முயற்சிக்குப்பின் உங்களின் எண்ணம் நிறைவேறும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்டநாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். ஈடுபடும் செயல்களில் வெற்றி காண்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். சகோதரர் வழியில் உதவி கிடைக்கும். உங்கள் ஆற்றல் வெளிப்படும். யோகமான நாள்.

# கச்சதீவை மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

## வெளிவிவகார இணை அமைச்சர்

திருச்சி, ஒக. 22

கச்சதீவை மீட்பதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி. முரளி தரன் கூறியுள்ளார்.

திருச்சியில் ஹிந்தி பிரசார சபா நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹஒரே நாடு, ஒரே தேர்தல்" குறித்து நாடு முழுவதும் விவாதிக்கப்பட்டு வருகிறது. அது தொடர்பாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கச்சதீவை மீட்பதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சாவர்க்கர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என தமிழக அரசியல்வாதிகள் சிலர் தெரிவிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. அப்படி கூறுபவர்கள், வரலாற்றை ஒருமுறை சரியாகப் படித்தால், உண்மையைத் தெரிந்து கொள்வார்கள்.

சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வந்துள்ள விவகாரத்தில், தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, தி. மு. க. அரசின் பல்வேறு ஊழல்களை சுட்டிக்காட்டி பா. ஜ. க. தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது. இதனால், தமிழக மக்களிடையே பா. ஜ.கவுக்கான ஆதரவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

# தீண்டாமைக்காக போராடும் எம்முடன் திருவமாவளவன் இணைய வேண்டும்!

## பா. ஜ. க. கட்சி அழைப்பு

சென்னை, ஒக. 22

தீண்டாமை ஒழிப்பில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.கவை திருமாவளவன் ஆதரிக்க வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசிய மகளிரணித் தலைவியும், சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் வலியுறுத்தி உள்ளார்.

தி.மு.க. தலைவர் மற்றும் அந்தக் கட்சியின் பல்வேறு மூத்த உறுப்பினர்கள் இந்துமத நம்பிக்கைகளை புண்படுத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.

இதுகுறித்து முறைப்பாடு கொடுத்தாலும், தி. மு. க. அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால், தி. மு. க. அரசு ஒருதரப்பு மக்களுக்கு எதிரானது என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்லி வருகிறோம். திருமாவளவனின் இலக்கு எப்போதும், இந்து கோயில்கள் மற்றும் இந்துக்களின் நம்பிக்கைகள் மட்டும்தான். இதர மத நம்பிக்கைகளை, செயல்பாடுகளை அவர் கண்டுகொள்ளமாட்டார்.

திருமாவளவன் யாரை திருப்திபடுத்துவதற்காக, எதைப் பெறுவதற்காக இந்து மதத்தை தொடர்ந்து விமர்சித்து வருகிறார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. தீண்டாமையை ஒழிப்பதில் ஆர். எஸ். எஸ்., பா. ஜ. க. போன்றவை சத்த மில்லாமல் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. எனவே, தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றால் அவர் எம்முடன் இணைய வேண்டும் - என்றார். (ஐ)

# இலங்கை வருகின்றன சீன போர் கப்பல்கள் தென்னந்தியாவில் பாதுகாப்பை உயர்த்துக!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

சென்னை, ஒக. 22

இலங்கை கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவரும் நிலையில், தென்னிந்தியாவின் பாதுகாப்பை மத்திய அரசு வலுப்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ச. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை:

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள சீன உளவுக்கப்பல் யுவான் வாங் 5, இந்தியாவின் எந்தெந்த நிலைகளை உளவு பார்க்குமோ என்ற பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில், இனிவரும் காலங்களில் தனது போர் கப்பல்களைத் தொடர்ந்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அணிவகுக்கச் செய்ய சீனா தீர்மானித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

இந்தியாவையொட்டிய இந்து பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த 2020ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை சீனாவின் 53 உளவுக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் வலம் வந்திருக்கின்றன.

எந்த நேரத்திலும் குறைந்தது 3 முதல் 5 கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் இருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழலில், தமிழகத்திலிருந்து 100 கிலோ மீற்றருக்கும் குறைவான தொலைவில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சீன போர் கப்பல்களும் வரத் தொடங்கினால் அது இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இதைக் கருத்தில் கொண்டு, தென்னிந்தியாவின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# ஜெயலலிதாவுக்கு அளித்த சிகிச்சைகள் சரியானவையே!

## எய்ம்ஸ் மருத்துர் குழு அறிக்கை

சென்னை, ஒக. 22

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் அப்பலோ மருத்துவ மனை எவ்வித குறையும் வைக்கவில்லை. அங்கு அளிக்கப்பட்ட அனைத்து சிகிச்சைகளுமே முறை யான மருத்துவ நடைமுறைகளுக்கு உட்பட்டே இருந்துள்ளது என்று எய்ம்ஸ் மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.

ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் இருப்பதாக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சந்தேகம் எழுப்பிய நிலையில் அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி இது குறித்து விசாரிக்க ஒரு நபர் ஆணையம் ஒன்றை அமைத்தார். அந்த ஆணையத்துக்கு உதவ எய்ம்ஸ் மருத்துவர்கள் கொண்ட 7 பேர் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது.

இந்த மருத்துவக் குழு ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள் ஆணையத்தில் அளித்த வாக்குமூலம். மருத்துவர்கள் சிகிச்சை அளித்தது தொடர்பான ஆவணங்களை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில், "ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அவருக்கு பாதிப்பை ஏற்படுத்திய நோய்களை சரியாக மருத்துவ பரிசோதனைகள் மூலம் கண்டறிந்துள்ளனர். ஜெயலலிதா சிகிச்சையில் இருந்தபோது ஒவ்வொரு நாளும் அவர் உடல்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்துமே திகதி வாரியாக சரியாக குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் விவரங்கள் முழுமையாக இடம்பெற்றுள்ளன - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)



## திருக்கேதீச்சரம் ஆவண பெட்டகம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கைத் தமிழர் கழகத்தால் திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம் எனும் நூல் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

இலங்கையில் பாடல் பெற்ற தலமாக திருக்கேதீச்சரம் ஆலயத்தின் வரலாற்று தகவல்கள் அடங்கிய ஆவணப் பெட்டகமாக குறித்த நூல் கலாநிதி ஆறு திருமுருகனால் தொகுக்கப்பட்டு நேற்று முன்தினம் அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலகத்தில் வெளியீடு செய்து வைக்கப் பட்டது.

திருக்கேதீச்சரத்தின் தொன்மையையும் வரலாற்றையும் சைவத்தின் பெருமைகளையும் ஒருங்கே வெளிக் கொண்டு வரும் வகையில் குறைத்த ஆவணத்தை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பெற்றுக் கொண்டார். (ஐ)



## போதை பாவனையை ஒழியுங்கள் சங்கானையில் நேற்று கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 22

போதைப் பொருள் பாவனையை ஒழிக்க வலியுறுத்தி சங்கானை பேருந்து நிலையம் முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

“சர்வதேச புகையிலை நிறுவனத்தின் வரி மோசடிக்கு உடந்தையாக இருந்தவர்களை அம்பலப்படுத்துங்கள்”, “யாழில் தடை செய்யப்பட்ட போதை ஊசி மருந்து பாவனைக்கு எதிராக அரசே நடவடிக்கை எடு”, “மது நிறுவனங்களுக்கு இளைஞர்களின் எதிர்காலத்தை விற்காதே”, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை போராட்டக்காரர்கள் இதன்போது ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர், வலி. மேற்கு பிரதேச சபையினர் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றிவர ரயில் சேவை!

### *விரைவில் ஆரம்பமாகும் என்கிறார் அமைச்சர் பந்துல*

யாழ்ப்பாணம், ஓக. 22

**யாழ்ப்பாணத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த திட்ட முன்மொழிவுகள் ரயில் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் பயணம் வந்துள்ள அமைச்சர், நேற்று காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு “யாழ் ராணி” ரயிலில் பயணித்தார்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்த அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேலும், வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணம் மக்களை கருத்தில் கொண்டு அதிகளவான சேவைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளோம்.

புதிதாக காங்கேசன்துறை - கிளிநொச்சி அறிவியல் நகருக்கு இடையிலான “யாழ் ராணி” சேவை , தடைப்பட்டிருந்த இரவு தபால் சேவை மீள ஆரம்பம், உத்தரதேவி மற்றும் கடுகதி சேவைகளின் தரிப்பிட நிலையங்களையும் அதிகரித்துள்ளோம்.

அத்துடன், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளைப் பயன்படுத்த அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குரிய திட்ட முன்




மொழிவுகள் ரயில் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மேலும், முல்லைத்தீவு, வவுனியா, மற்றும் அநுராதபுர மாவட்ட பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களை கருத்தில் கொண்டு, ஓமந்தை - அறிவியல் நகர் புகையிரத சேவையை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அத்துடன், தடைப்பட்டுள்ள “ஸ்ரீதேவி” சேவையை மீளஆரம்பிப்பதற்கு, பயணிகளின் ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். அதிகளவு பயணிகள் பயணிப்பார்கள் என்றால் அந்த சேவை மீளவும் ஆரம்பிக்கப் படும்.

இதேவேளை, பேருந்து, முச்சக்கர வண்டி உள்ளிட்ட தனியார் போக்குவரத்து சேவைகளின் கட்டண நிர்ணயத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ளும். முச்சக்கர வண்டிகளின் கட்டண அறவீடு தொடர்பாக சட்டத்திருத்தமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படும். அதிகரித்த கட்டணத்தை அறவிடுவோர் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பொதுமக்கள் முறைப்பாடு செய்ய வேண்டும் - என்றார். (ஐ-3)

# இனத்தின் அடையாளங்களை சந்ததிக்கு கையளிக்கும் செயலை ஓம் ரீ. வி. செய்கிறது

### *தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி புகழாரம்!*

யாழ்ப்பாணம், ஓக. 22

எமது சமய அடையாளங்களையும் இனத்தின் அடையாளங்களையும் அடுத்த சந்ததிக்குக் கையளிப்பது காலத்தின் கடமையாகும். இதனை முன்னெடுப்பதில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. இந்த செயல்பாட்டில் ஊடகங்கள் இணைந்து கொள்ளும் போது அது மிகப்பெரும் அடைவைச் சந்திக்கும் - என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி சு. பரமானந்தம்.

“ஓம் தொலைக்காட்சி நல்லூர் திருவிழா காலத்தில் இளையோருடைய சைவசமய அறிவை மேம்படுத்துவதற்காக சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சியை முன்னெடுத்தாலும் இளையோர் மத்தியிலான அடையாளக் கையளிப்பாகவே இந்த நிகழ்ச்சியை நோக்க வேண்டும்”, என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்லூர் பெருந்திருவிழாவையொட்டி டான் தொலைக் காட்சி குழுமத்தின் ஓம்



தொலைக் காட்சி அலைவரிசையால் முன்னெடுக்கப்பட்டுவரும் சைவம் தழைத்தோங்க நிகழ்வின் 19ஆவது நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் அருகேயுள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சியில் இளையோரின் சமய அறிவை மேம்படுத்தும் முகமாக வினா - விடைப் போட்டி நடைபெறுகிறது. இதனை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் நடத்தி வருகின்றார். வெறுமனே வினா - விடை நிகழ்ச்சியாக அல்லாமல் வாழ்வியலுக்குத் தேவையான பல அறிவூட்டல்கள் நிகழ்ச்சியின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்வின் நடுவர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் தர்சினி முத்துராஜா, ஓம் தொலைக்காட்சியின் பிரதான வர்ணனையாளர் மதுரகவி காரை எம். பி. அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நல்லூரில் இருந்து நேரலையாக ஒளிபரப்பாகும் சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சி ஓம் தொலைக்காட்சியின் நேரடி அலைவரிசை ஊடாகவும் ஓம் தொலைக்காட்சியின் முகநூல் மற்றும் யூ -ரியூப் மூலமாகவும் ஒளிபரப்பாவது தெரிந்ததே. (ஐ)



## அமைச்சர் பந்துல குணவர்த்தன இ. போ. ச. ஊழியருடன் சந்திப்பு

வடமராட்சி, ஓக. 22

யாழ்ப்பாணம் வந்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலைக்கு சென்று ஊழியர்களை சந்தித்து அவர்களின் தேவைகள் - குறைகளை கேட்டறிந்தார்.

இதன்போது, பேருந்துகளுக்கு தேவையான ரயர்கள் மற்றும் உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், எதிர்காலத்தில் சிற்சில உதிரிப் பாகங்களை அந்தந்தப் பிரதேசங்களிலேயே கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அமைச்சர் பந்துலவுடன் மீன்பிடி அமைச்சரான கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பின்னர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ-2)

# மருந்துப் பொருட்களை அன்பளித்தது ஆஸ்திரியா!

புதுடில்லி, ஓக. 22

ஆஸ்திரிய அரசாங்கம் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

27 அத்தியாவசிய மருத்துவ பொருட்கள் அடங்கிய உதவிப் பொதியை இந்தியாவுக்கான ஆஸ்திரிய தூதுவர் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொடவிடம் கையளித்தார்.

இலங்கையில், அவசரமாகத் தேவைப்படும் மருந்து களுக்காக அரசாங்கம் வெளிநாடுகளுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த மருந்துவப் பொருட் கள் வழங்கப்பட்டுள்ளன.

மருந்து பொருட்களை பெற்றுக்கொண்ட உயர் ஸ்தானிகர், ஆஸ்திரிய அரசுக்கு நன்றிகளை தெரிவித்துள்ளார். (ஐ)

# லொறி - மோ.சைக்கிள் விபத்து; வவுனியாவில் இளைஞன் பலி!

வவுனியா, ஓக. 22

வவுனியாவில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு மணியளவில் ஏ - 9 வீதியில் தேக்காவதை பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில், ஆனந்த குமார் கேதீஸ்வரன் (வயது 22) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி கால்நடைகளுடன் பயணித்த லொறியுடன் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த லொறி கால்நடைகளை சட்டவிரோதமாக கொழும்புக்கு ஏற்றிச் சென்றது விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்த இரு சம்பவங்கள் குறித்தும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தண்ணீர் கட்டணம் செலுத்தாத அரசியல்வாதிகளுக்கு சிக்கல்!

கொழும்பு, ஓக. 22

நீண்டகாலமாக தண்ணீர் கட்டணத்தைச் செலுத்தாத பல்வேறு பதவி நிலைகளில் உள்ள 60 அரசியல்வாதிகளின் இல்லங்களுக்கான தண்ணீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு சபை தீர்மானித்துள்ளது.

அரசியல்வாதிகள் செலுத்தத் தவறிய குடிதண்ணீர் கட்டணங்களின் மொத்த மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாகும். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும் இந்தப் பட்டியலில் உள்ளனர்.

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய ஓய்வுபெற்ற அமைச்சர்களின் ஓய்வூதியத்தில் இருந்து நிலுவைத் தொகையை மீட்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இனப்படுகொலையாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜெனிவாவுக்கு மனு!

வவுனியா, ஓக. 22

**எமது இனத்தைப் படுகொலைக்கு உள்ளாக்கிய கோட்டாபய வையும் அவருடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தில் உள்ளவர்களையும் சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்தில் (ஐ. சி. சி) நிறுத்தி தண்டனையை பெற்றுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மனு ஒன்றை ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.**

வவுனியா நகரசபை மண்டபத்தில் வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கட்சித் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப் புக்களை அழைத்து நேற்று கூட்டம் இடம்பெற்றது. இதன் பின்னர் செய் தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தன்நடராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்பாக அனைவரின் ஏகோபித்த கருத்தாக ஜெனிவா கூட்டு நாடுகளுக்கு அனுப்புவதற்கு மனுவில் கையொப்பமிட்டு அனுப்புவதற்காக இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியி ருந்தோம்.

கடந்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி அனைவரும் ஒற்றுமையாக ஒரே குரலில் கோரிக்கைகளை முன்வைத்தது போல் இந்த தடவையும் இதை செய்வதற்கு நாம் முன்னெடுத்திருக்கின்றோம். அதில் ஓரளவு வெற்றிபெற்றிருக்கின்றோம்.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவை தெரிவித்திருக்கின்றது. நாங்கள் எழுதிய மனுவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஏனைய கட்சிகளும் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அவர்கள் ஏற்றுக் கொண்டனரென வந்த பிரதிநிதிகள் கூறியிருக்கிக்கின்றார்கள். அதை தமது தலைமை பீடங்களுடன் கதைத்துத் தான் தமது இறுதி முடிவை அறிவிப்பார்கள்.

தனிப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மூலமாக மிகுதி விடயத்தை கொண்டு செல்ல எமக்கு கால அவகாசம் போதாமல் இருப் பதால், நாங்கள் இன்றோ (நேற்று) நாளையோ (இன்று) அவர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டாவது அவர்களின் அனு மதியை மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ, தொலைபேசியில் குறுஞ்செய்தி மூலமாகவோ பெற்று நாங்கள் கூடிய விரைவில் அதை அனுப்பி வைப் போம். ஏனென்றால் காலம் போதியதாக இல்லை. இந்த அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து அந்த மனுவை அனுப்புவதாக உள்ளோம்.

அதைவிட இன்னொன்று தயார் செய்து வைத்துள்ளோம். அது சமூக அமைப்புகளும், பாதிக்கப்பட்ட தரப்பினருமாக சேர்ந்து அனுப்புவதற்காக, அதிலே நாங்கள் அரசியல் தீர்வு தொடர்பாக சர்வசன வாக் கெடுப்பு, கையகப் படுத்தப்பட்ட நிலம், அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலம், விகாரைகளை அகற்றல் என ஆறு விடயங்களை உள்ளடக்கி இருக்கின் றோம் - என்று கூறினார். (ஐ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தொடங்கின!

கொழும்பு, ஓக. 22

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டன என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒரு இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் அடங்கிய இரண்டாவது கப்பல் அடுத்த வாரம் நாட்டை வந்தடையும். இவற்றின் மூலம் எதிர்வரும் 40 நாட்களுக்கு எண்ணெய் சுத்திகரிப்பு நிலை யத்தை இயக்க முடியும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மிகையொலி விமானங்களுக்கான எரிபொருள் நேற்று முன்தினம் இரவு தரையிறக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்!




## மன்னாரில் நேற்று போராட்டம்



மன்னார், ஓக. 22

பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடி யாக இரத்து செய்யக் கோரியும், ஜனநாயகப் போராட்டங்களில் பங்கேற்றவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் மன்னாரில் நேற்று போராட்டம் இடம் பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக் கான நிறுவனத் துக்கான ஒருங்கிணைப்பில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தால் மிகவும் பாதிக்கப் பட்ட தரப்பு தமிழர் என்ற வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும், ஜனநாயக அறவழிப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர் செயல் பாட்டாளர்கள், இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரியும், அவர்களை பயங்க ரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க கூடாது எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அங்கத்த வர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல் லைதீவு, மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பொது மக்கள் பெண்கள் குழுக்கள், சமூக செயல்பாட்டாளர்கள் மன்னார் மெசிடோ நிறுவன அதிகாரி கள், பாதிக்கப்பட்டவர்களுக்கான இணையத்தின் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அனைத்து அறவழி போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்க, மாணவர் செயல்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளிப்பதற்கு என தயாரிக்கப்பட்ட பொது மனுவும் போராட்டத்தின் போது வாசிக்கப்பட்டது. (ஐ)

# கொரோனா தொற்றுப் பரவல் தீவிரம்; கண்டறியும் கருவிகளுக்கு தட்டுப்பாடு!

## சுகாதார அமைச்சு அவசர எச்சரிக்கை

**கொழும்பு, ஒக. 22**
**நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், கொரோனா தொற்றை கண்டறிவதற்கான கருவிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

அத்துடன், கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது மாத்திரமே தற்போதைய சூழ்நிலையில் கைகொடுக்கும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் கையிருப்பில் குறைந்த எண்ணிக்கையிலான பி. சி. ஆர். மற்றும் அன்ரிஜென் கருவிகளே காணப்படுகின்றன. இதனால், மக்களிடையே கொரோனா வைரஸ் தொற்றுகளை கண்டறிய தேர்ந்தெடுக்கப்பட்ட முறையின் கீழ் மாத்திரம் தற்போது பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

மேலும் நாட்டில் தற்போது குறைந்தளவில் மாத்திரமே மருந்துகள் மற்றும் உபகரணங்கள் காணப்படுகின்றன. இதனால், மக்களிடையே வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த அதிகபட்ச முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் இதற்கு முன்னர் ஒரே நாளில் கிட்டத்தட்ட 25 ஆயிரம் சோதனைகளை நடத்திய காலக்கட்டங்கள் உள்ளன. துரதிர்ஷ்டவசமாக தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இத்தகைய சோதனைகளை நாடு மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதேவேளை பரிசோதனைக் கருவிகளை மிகவும் கவனமாகப் பயன்படுத்துவதன் மூலம் சுகாதார தரப்பினர் நோயாளிகளைக் கண்டறிகிறார்கள். இந்த சூழ்நிலையில் பாதிக் கப்பட்டவர்களின் எண் ணிக்கை அதிகரித்தால் நாடு மீண்டும் ஓர் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

எனவே, வைரஸை கட்டுப்படுத்த நமது அதிகபட்ச முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்பதை மக்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், தொடர்ச்சியாக மருத்துவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். எனவே இதனை கருத்தில் கொண்டு மக்கள் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனையில் தொற்றாளிகள் 7 பேருக்கு சிகிச்சை!

யாழ்ப்பாணம், ஒக. 22
கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 7 பேர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று அதன் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் கொரோனா தடுப்பு விடுதியில் தொற்றாளர்கள் 7 பேருக்கு சிகிச்சை வழங்கப் பட்டு வருகிறது.

இவர்களில் கர்ப்பவதிகள் இருவர் உள்ளடங்கலாக பெண்கள் நால்வரும் ஆண்கள் மூவரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# சிவமகராஜாவின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் இடம்பெற்றது!

யாழ்ப்பாணம், ஒக. 22
பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் "நமது ஈழநாடு" பத்திரிகையின் பணிப்பாளருமான சி. சிவமகாராஜாவின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

முன்னதாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்திலுள்ள சி. சிவமகாராஜாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் உமாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், கல்வியாளர்கள், கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவாளர் கௌரவிப்பு, பணியாளர் கௌரவிப்பு என்பன இடம்பெற்றதுடன் விருது வழங்கலும் இடம்பெற்றது.

2006 ஒகஸ்ட் 20 ஆம் திகதி சி. சிவமகாராஜா தெல்லிப்பழையிலுள்ள அவரின் வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீட்டு பணிப்பெண்ணாக சென்ற மலையக சிறுமி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஒக. 22
மலையகத்தில் இருந்து கம்பஹாவுக்கு வீட்டு வேலைக்கு சென்ற சிறுமியொருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

மஸ்கெலியா - மொக்கா தோட்டத்தை சேர்ந்த 17 வயதான சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டாரென கம் பஹா பொலிஸார் தெரிவித் தனர்.

நைவல வீதி - உடுகம்பளை பகுதியில் வீடு ஒன்றில் வேலைக்காக சிறுமி சென்றிருந்தார் என்று தெரிய வருகின்றது.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கம்பஹா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமி பணியாற்றிய வீட்டின் உரிமையாளர் ஆளும் தரப்பின் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரின் உறவினர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பாறையிலிருந்து தவறிவீழ்ந்து பல்கலைக்கழக மாணவி பலி!

கேகாலை, ஒக. 22
ஆய்வு ஒன்றுக்காக பாறைப் பகுதிக்கு சென்ற மாணவி ஒருவர் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

கேகாலை - மாவனெல்லை - உதுவன்கந்தையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அல்பிட்டி பகுதியைச் சேர்ந்த 27 வயதான மாணவியே உயிரிழந்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் 58 பேரை கொண்ட குழுவில் ஒருவராக ஆய்வொன்றுக்காக உதுவன்கந்தைக்கு சென்றிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மாவனெல்லை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# வசந்த கைதும் தடுத்துவைப்பும் தவறான முன்னுதாரணங்கள்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி

கொழும்பு, ஒக. 22
அவசரகால சட்டத்தை பயன்படுத்தி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைதுசெய்யப்பட்டமையும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் தவறான முன்னுதாரணங்கள் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அன்று அவசரகால சட்டத்தை பயன்படுத்தி தமிழ் இளைஞர், யுவதிகளின் சாத்வீக போராட்டத்தை கட்டுப்படுத்திய அரசாங்கம், இன்று அதே அவசரகால சட்டத்தை பயன்படுத்தி சிங்கள இளைஞர், யுவதிகளை கட்டுப்படுத்துவதானது சர்வதேசத்துக்குக் கொடுக்கின்ற தவறான முன்னுதாரணமாகும்.

அனைத்துப் பல்கலைக்கழக



மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உட்பட இன்னும் இருவரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் செய்த குற்றம் என்ன?

மக்களுக்காக வீதியில் இறங்கி சாத்வீக போராட்டம் செய்தது தவறா? அல்லது நாட்டு மக்களை ஒன்றிணைத்து பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்ட ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர்களை பதவிகளில் இருந்து வெளியேற்றியது தவறா? அல்லது அவர்கள் ஆயுதம் ஏந்தி பேராடினார் களா? யாருடையை சொத்தையும் கொள்ளையடித்தார்களா? நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்களா? எதுவும் இல்லை.

ஆனால், இவற்றையெல்லாம் செய்தவர்களை வெளியில் விட்டுவிட்டு மக்களுக்காக போராட்டம் செய்தவர்களை கைது செய்து 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய முற்படுவதானது சர்வதேசத்துக்கு நாம் கொடுக்கின்ற தவறான செய்தியாகும்.

இனிமேல் யாரும் சாத்வீக போராட்டத்தை இலங்கையில் முன்னெடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதாகவே இந்த செயல்பாடுகள் அமைந்துள்ளன. இதன் மூலமாக சாத்வீக போராட்டங்களை கட்டுப்படுத்தலாம் என்று ஜனாதிபதியும் அரசாங்கமும் நினைத்தால் அது அவர்களின் தவறான புரிதலாகவே இருக்கும் - என்றுள்ளது. (கே)

# போதைப் பொருட்களுடன் கல்முனையில் ஒருவர் கைது!

கல்முனை, ஒக. 22
போதைப் பொருட்களுடன் கல்முனை மாநகரப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாகாமம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைதானவர், கேரளா கஞ்சா, ஹெரோயின் போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்தவர் என்றும், கல்முனைகுடி 12ஐ சேர்ந்த 38 வயது நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாறுவேடத்தில் சென்ற விசேட அதிரடிப் படையினராலேயே அவர் கைது செய்யப்பட்டார். கைதானவரிடமிருந்து 4.42 கிராம் ஹெரோயின், 765 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-1)

# 16ஆவது மாடியிலிருந்து தவறிவீழ்ந்து ஒருவர் பலி!

கொழும்பு, ஒக. 22
கொழும்பு - கொள்ளுப்பிட்டியில், கட்டுமானப் பணி இடம்பெறும் கட்டடத்தின் 16ஆவது மாடியிலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

இந்த பதுருஸ்ல - கொஸ்வத்தையை சேர்ந்த 31 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர், 16 ஆம் மாடியில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் அவசர தேவைக்காக கீழ் மாடிக்கு வருவதற்கு முயற்சித்தபோதே, 16 ஆம் மாடியிலிருந்து ஆறாவது மாடியில் விழுந்து உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில், கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# பாகிஸ்தானை உலுக்கும் விலைவாசி உயர்வு!

பர்ஹத் ஜாவேத்

## பாகிஸ்தானில் பிரியாணிக்கு பதில் பருப்பு சாதம் சமைக்கும் நிலைமை ஏன் தெரியுமா?

**பா**கிஸ்தானில் ஒவ்வொரு ஆட்சியின்போதும் மக்கள் பணவீக்கம் பற்றி புகார் கூறிவந்துள்ளனர். ஆனால் கடந்த சில மாதங்களாக ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் என எல்லா பிரிவு மக்களுமே சிரமப்படுகின்றனர்.



பொதுவாக பணம் இருப்பவர்கள்கூட விலைவாசி உயர்வு பற்றி குறைகூறுவார்கள். ஆனால் சாதாரண வேலை செய்யும் குடிமக்களுக்கு இது ஒரு பெரிய போர். அவர்கள் ஒவ்வொரு நாளும் போராட வேண்டும்.

விலைவாசி உயர்வு என்பது ஒரு சுரங்கப்பாதை. அதன் முடிவில் வெளிச்சம் இல்லை என்று ராவல் பிண்டியில் வசிக்கும் காலிதா க்வாஜா கூறுகிறார். அவர் நடுத்தர குடும்பத்த்தைச்சேர்ந்தவர். இப்போதெல்லாம் “சொந்த வீடு“, மற்றும் “குழந்தைகளின் முழுமையான கல்வி“ மட்டுமே அவருக்கு இருக்கும் நிம்மதி.

இப்போது தன் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்க நினைக்கும் போது, விலைவாசி உயர்வு தன்னை திகைக்கவைக்கிறது என்கிறார் அவர்.

“இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறொருவரின் திருமணத்திற்குச் செல்வதற்கு முன் நான் பலமுறை



யோசிக்கிறேன். என் வீட்டில் திருமணம் செய்வது என்பது தற்போது மிகவும் கடினமாகத் தெரிகிறது,” என்று அவர் குறிப்பிட்டார்.

காலிதாவின் வீட்டின் வரவுசெலவு கணக்கை அறிவதற்கு முன், விலைவாசி உயர்வு ஏன் அனைவரின் கழுத்தையும் நெரிக்கிறது என்பதை அறிய சில புள்ளிவிவரங்களை பார்ப்போம்.

### காய்கறிகள், பால், முட்டை, உணவுப் பொருட்களின் விலை என்ன?

நடப்பு ஆண்டின் ஜூலை மாதத்தில் பணவீக்கம் கடந்த ஆண்டை விட சுமார் 25 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று பாகிஸ்தானின் புள்ளியியல் துறை தெரிவிக்கிறது.

பருப்பு விலை 35 முதல் 92 சதவிகிதம் வரை அதிகரித்துள்ளது.

வெங்காயத்தின் விலை கிட்டத்தட்ட 60 சதவிகிதமும் இறைச்சியின் விலை 26 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

காய்கறிகளின் விலை 40 சதவிகிதமும், பழங்களின் விலை 39 சதவிகிதமும் உயர்ந்துள்ளது.

பால் விலை 25 சதவிகிதமும், முட்டை மற்றும் தேயிலையின் விலை 23 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

### பிற பொருட்களின் விலை அதிகரிப்பு என்ன?

உணவுப்பொருட்களின் நிலை இதுதான். இப்போது மற்ற பொருட்களையும் பார்க்கலாம்.

குளிப்பதற்கான சோப்பு, துணிதுவைக்கும் சோப்பு பவுடர் மற்றும் தீப்பெட்டியின் விலை 25 வீதம் உயர்ந்துள்ளது.

ஆடைகளின் விலை 18 சதவிகிதமும், காலணிகள் 19 சதவிகிதமும், பிளாஸ்டிக் பொருட்களின் விலை 19 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

வாகனங்களின் எரிபொருள் விலை கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 95 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இது மிகவும் அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது.

மின் கட்டணம் 87 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இப்போது பிரியாணி மசாலா வாங்குவது பணவிரயம் போலத் தெரிகிறது.

இன்று ஒரு சாதாரண குடும்பத்தில் பட்ஜெட்டை நிர்வகிப்பது மிகவும் கடினம் என்று காலிதா க்வாஜா கூறுகிறார்.

அவருக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். தற்போது இரண்டு பேர் வேலை செய்கிறார்கள். இவரது கணவர் சிறுதொழில் செய்து வருகிறார், இவரது மகன் ஒருவர் சமீபத்தில் தனியார் துறையில் வேலை செய்யத் தொடங்கினார்.

விலைவாசியுடன் கூடவே வருமானமும் அதிகரித்துள்ளதா என்று அவரிடம் கேட்டபோது, “மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே வருமானம்தான் இப்போதும் உள்ளது. தேவைகளும் அதேதான். ஆனால் விலைவாசி அதிகரிப்பால் செலவுகள் மிகவும் அதிகமாகிவிட்டன. மளிகைக்கடையில் ஐயாயிரம் ரூபாய் கொடுத்தாலும், இரண்டு பைகள் கூட நிரப்புவதில்லை. பாக்கெட் முற்றிலும்



காலியாகிவிடுகிறது,” என்றார்.

“ஒவ்வொரு முறை கூடையில் எதாவது ஒரு பொருளை வைக்கும் முன், அது இல்லாமல் என்னால் வாழ முடியுமா என்று நான் சிந்திக்கிறேன். இப்படி நினைத்து பாதி சாமான்களை அப்படியே திருப்பி வைத்துவிடுகிறேன். முன்பு முக்கிய சாமான்கள் தவிர எனக்குப்பிடித்த சிலவற்றையும் வாங்குவேன். ஆனால் இப்போது பிரியாணி மசாலா கூட வாங்குவதில்லை. ஏனென்றால் இதுவும் காசு விரயம் என்று தோன்றுகிறது,” என்று காலிதா குறிப்பிட்டார்.

### “இப்போது பிரியாணிக்கு பதிலாக பருப்பு-சாதம் சமைக்கிறேன்”

சாப்பிடுவதையும் குடிப்பதையும் விட்டுவிட முடியுமா என்று காலிதா கேட்கிறார். “எண்ணெய், நெய், மாவு, பருப்பு எல்லாவற்றையும் விட்டுவிட முடியுமா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

“ஏற்கனவே கோழி மற்றும் இறைச்சியை வாங்கமுடியாத நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம். முன்பு எல்லா நேரங்களுக்கும் புதிய உணவுகள் சமைக்கப்பட்டன. இப்போது மதிய உணவை இரவிற்கும் வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறோம்,” என்றார் அவர்.

“முன்பு நான் பிரியாணி சமைப்பேன். இப்போது நான் பருப்பு, சாதம் சமைக்கிறேன். இவைதான் என்னால் குறைக்கமுடிந்த செலவு.”

மின்கட்டணத்தைப் பற்றிப் பேசிய அவர், “மின் சாரக் கட்டணம் எல்லோருக்குமே ஒரு சுமையாக உல்ளது. இரண்டு ஏசிகளில் ஒன்றை மட்டுமே இயக்குகிறோம், அதுவும் வெய்யில் மிக அதிகமாக



இருக்கும்போது. அது தவிர ப்ரிட்ஜ் ஓடுகிறது. வாஷிங் மிஷினை வாரம் ஒருமுறை பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த மாதம் மின்சார பில் 30 ஆயிரம் ரூபாய் வந்தது,” என்றார்.

### “உறவினர்களை பார்க்கச்சென்றால் பெட்ரோல் செலவு”

அதிகரித்து வரும் பெட்ரோல் விலையைப் பற்றிப்பேசிய காலிதா, “ஆண்கள் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்றனர். குடும்பம் ஒன்றாக செல்லும்போது நாங்கள் கார் பயன்படுத்துகிறோம்.

ஆனால் இப்போது உறவினர் வீடுகளுக்குச் செல்வது மிகவும் குறைந்துவிட்டது. ஏனென்றால் பெட்ரோல் செலவு ஒருபுறம். கூடவே ஒருவரின் வீட்டிற்கு வெறுங்கையுடன் போகமுடியாது.” என்று தெரிவித்தார்.

அன்றாடத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யமுடியாத அளவுக்கு விலைவாசி அதிகரித்துவிட்டது என்கிறார் காலிதா க்வாஜா. அத்தகைய சூழ்நிலையில் அவசரகாலங்களுக்காக கையில் எதுவும் மிச்சமிருப்பதில்லை என்று அவர் மேலும் கூறினார். **(பிபிசி)**

# தோற்றுப்போனதை விரும்பாத கோட்டா தோல்வியை ஏற்று நாடு திரும்புவாரா?

பனங்காட்டான்

இலங்கை அரசியலில் சாத்திரக்காரர்களையும் குடுகுடுப்பைக்காரர்களையும்விட சில அரசியல்வாதிகளே எதிர்கால ஆருடம் கூறுபவர்களாக மாறியுள்ளனர். கடந்த சில நாட்களாக வெளிவரும் சில செய்திகளுக்கு சில அநாமதேயங்கள் மூலமாக உள்ளன.

தற்போது தாய்லாந்தில் விடுதி ஒன்றுக்குள் முடங்கிக் கிடக்கும் கோதபாய பற்றி வெளிவரும் செய்திகளையே இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

கோட்டாபயவுக்கு எப்போதும் ஒரு ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகள் உண்டு, அவருக்குரிய பாதுகாப்புகளை ரணில் ஏற்படுத்த வேண்டும், அவருக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் கடமை, கோட்டா நாடு திரும்பும்போது அவரை வரவேற்க ஏற்பாடு மும்முரம் என்று ஒரு தொகுதி செய்திகள் ஊடகங்களில் செட்டை கட்டிப் பறக்கின்றன.

கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளார், பெரமுனவின் தேசியப்பட்டியலூடாக அவரை எம்.பியாக்க நடவடிக்கை, போராளிகளுக்கு பயந்து அவர் வெளிநாட்டில் ஒளிந்திருப்பதை ஏற்க முடியாது என்பவை இன்னொரு வகையான செய்திகள்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் இதுவரை இரண்டு தடவைகள் மட்டும் வாய் திறந்துள்ளார். கோட்டாபய நாடு திரும்பும் சூழ்நிலை இப்போதில்லை என்று இரண்டு வாரங்களுக்கு முன் சொன்னார். அவர் நாடு திரும்புவது பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்று இப்போது கூறுகிறார்.

இதற்கு மறுத்தான் கொடுப்பதுபோல இரண்டு செய்திகள் வந்துள்ளன. கோட்டாபயவின் மிரிகான இல்லத்துக்கு கடும் பாதுகாப்பை பொலிஸ்மா அதிபர் ஏற்படுத்தியுள்ளார் என்பது ஒன்று. கோட்டாபயவுக்கு எட்டடுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அடுத்தது.

இவைகள் எல்லாவற்றையும் தாண்டி இன்னொரு அதிமுக்கியமான செய்தியும் உண்டு. கோட்டாபய கிறீன் கார்ட் கோரி அமெரிக்காவிடம் விண்ணப்பித்துள்ளார்என்பது அது. கோட்டாவின்மனைவி அயோமா அமெரிக்கா பிரஜாவுரிமை வைத்துள்ளார். இவர்களின் மகனும் மருமகளும் அமெரிக்க பிரஜாவுரிமையுடன் அங்கு வாழ்கிறார்கள். அதனால் தமக்கு கிறீன் கார்ட் பெற முடியுமென கோட்டா நம்புகிறார்.

ஏற்கனவே இரட்டைப் பிரஜாவுரிமை பெற்று அமெரிக்காவில் வாழ்ந்த இவர் தமது அண்ணன் மகிந்தவின் வேண்டுகோளின் பேரில் அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்துச் செய்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 69 லட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றவர்.

பத்தொன்பதாவது அரசியல் திருத்தம் காரணமாக மகிந்த மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதிருந்தார். மற்றைய சகோதரரான பசில் இரட்டைப் பிரஜாவுரிமையுடன் இருந்ததால் அவரும் போட்டியிட முடியவில்லை. குடும்ப இளவரசராக போற்றப்படும் நாமல் ராஜபக்சவை சில ஆண்டுகளின் பின்னர் வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயார்படுத்தும்வரை குடும்பத்தில் எவராவது ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டுமென்ற சுயஇச்சை காரணமாகவே கோட்டாவை மகிந்த களம் இறக்கினார் என்பது பகிரங்க ரகசியம்.

ஒருவாறு அடுத்த ஓரிரு தேர்தல்கள்வரை ஜனாதிபதிக் கதிரையை வைத்திருந்தால், அதன் பின்னர் நாமல்தான் ஜனாதிபதி என்ற கனவில் சஞ்சரித்த மகிந்த, யதார்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை.

ஒருவகையில் பார்க்கின், இது பொரிமாத் தோண்டி கதைதான். ஆசை அண்ணனால் ஜனாதிபதிக் கதிரையில் ஏற்றப்பட்ட அன்புத் தம்பி கோட்டா, தாம் மட்டும் பதவி இழக்கவில்லை. ராஜபக்ச குடும்பத்தினர், அவர்களின் வாரிசுகள் அனைவரையும் அடித்துத் தள்ளிவிட்டு, எவருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் நாட்டை விட்டு ஓடி நாடோடியாக இதனை எழுதும் வேளையில் தாய்லாந்து ஹோட்டலுக்குள் மனைவியுடன் தங்கியுள்ளார்.

சொல்லாமற் கொள்ளாமல் ஓடினார் என்று சொல்வதற்கு துணையாக நிற்பது அண்மைய மகிந்தவின் கூற்று. கோட்டாபய ஏன் நாட்டைவிட்டு ஓடினார் என்பது தமக்குத் தெரியாது என்று ஊடகங்களுக்கு மகிந்த சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் கோட்டாபயவின் மீள்வருகை பற்றி வெளிவரும் செய்திகளையும் தகவல்களையும் வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். மகிந்த ஜனாதிபதியாக பதவி வகித்த



காலிமுகப் போராட்டம் முனைப்புப் பெற்ற வேளையில் ராஜபக்ச குடும்பத்தினரை ஒவ்வொருவராக பதவி இழக்கச் செய்தபின்னரும் தோற்றுப்போன தலைவராக பதவி விலக மறுத்தவர் கோட்டாபய. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லையெனக் கூறி அதுவரை தம்மைப் பதவி தொடர அனுமதிக்குமாறும் யாசித்தவர் இவர். இப்போது தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு இலங்கை திரும்ப உண்மையாகவே இவர் விரும்புகிறாரா?

பத்தாண்டுக் காலத்தில் பின்பற்றப்பட்ட ஒருவகைப் பாணியே மீண்டும் இலங்கை அரசியலில் செயற்பட ஆரம்பித்துள்ளது. கெகலிய ரம்புக்வெல, ஜோன்ஸ்ரன் பெர்ணான்டோ, மகிந்தானந்த அளுத்கமகே என மூவர் அப்போது அமைச்சர்களாக இருந்தனர். இவர்களை மகிந்தவின் - பொக்கற் நாய்க்குட்டிகள் என்றே அழைப்பர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஊடகங்களுடன் தொடர்பு இருந்தது. இதனைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு விடயத்தை வெவ்வேறு வகையில் எவரது பெயரையும் குறிப்பிடாது அந்தந்த ஊடகங்களில் வெளியிடச் செய்து விடுவார் மகிந்த. செய்தி வழங்கியவரின் பெயர் எங்கும் தெரிவிக்கப்படுவதில்லை.

இந்தச் செய்திகளுக்கான பிரதிபலிப்பு என்ன என்பதை நாடி பிடித்துப் பார்க்கும் மகிந்தவின் உத்தி இது. அந்தச் செய்திக்கு எதிர்ப்புகள் கிளம்பின் அவரே ஊடகங்களோடு தொடர்பு கொண்டு அது தவறு என தெரியப்படுத்துவார். ஆனால் எதிர்ப்புக் கிளம்பாவிடின் அதனை செயற்படுத்திவிடுவார்.

மகிந்தவின் அன்றைய வழித்தடத்தில் இப்பொழுது பசில் ராஜபக்ச நடைபயில்கிறார். அதே கெகலிய ரம்புக்வெலவுடன் பந்துல குணவர்த்தன, பிரசன்ன ரணதுங்க ஆகிய அமைச்சர்கள் இன்று வாலாட்டி வேலைகளைச் செய்கின்றனர்.

கோட்டாபய எவ்வாறான நெருக்கடியில் நாட்டைவிட்டு ஓடிப்போனார் என்பது அனைவரும் அறிந்த சமாசாரம். தமது பதவியை தக்கவைக்க முதலில் மகிந்த, சமல் ஆகிய சகோதரர்களையும், நாமல் மற்றும் சசீந்திரா ஆகிய பெறாமக்களையும் அமைச்சர் பதவிகளை துறக்க வைத்தார்.

பின்னர், அடுத்த சகோதரர் பசிலை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வைத்தார். ஐக்கிய தேசிய கட்சியை கவிழ்த்து தாமும் தேர்தலில் தோல்வியுற்று பூச்சியத்தின் மன்னனாகவிருந்த ரணிலை இழுத்து வந்து பிரதமராக்கினார். இன்னும் என்னென்னவோ எல்லாம் பூட்டிய கதவுக்குள் செய்து பார்த்தார்.

69 லட்சம் மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதியானவன் நான். அவர்கள் இன்னும் என்னுடனேயே இருக்கிறார்கள். தோற்றுப்போன ஒருவராக பதவி துறக்க தாம் விரும்பவில்லை என்று சொல்லிப் பார்த்தார்.

மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன், எனது பதவிக்காலம் முடியும்வரை ஜனாதிபதியாக இருக்க விடுங்கள் என்று இறுதியில் மன்றாடியும் பார்த்தார். யூலை 9ம் திகதி இவை அனைத்துக்கும் போராட்டக்காரர்கள் முடிவு கட்டினர்.

2019 நவம்பர் பத்தொன்பதாம் திகதி இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக பதவி ஏற்ற நந்தசேன கோட்டாபய என்ற முன்னாள் ராணுவ அதிகாரி, 2022 யூலை 14ம் திகதி சிங்கப்பூரில் இருந்தவாறு தமது பதவியை ராஜினாமா செய்து, இலங்கையின் அரசியல் வரலாற்றில் துரத்தியடிக்கப்பட்டு பதவியிழந்த முதலாவது ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்றார். இரண்டு வருடம் ஏழு மாதம் இருபத்தைந்து நாட்களுடன் இவரது பதவிக்காலம் முடிவுற்றது.

காலிமுகப் போராட்டத்தின் மூலக்கோரிக்கை கோட்டா கோ ஹோம் என்பதுவே. அதாவது ஜனாதிபதிப் பதவியை விட்டு வெளியேறு என்பதுதான். அதற்கிணங்க இவர் மறுத்ததால்தான் இவர் மீதான அம்பு மற்றைய ராஜபக்சக்கள் மீது பாய்ந்து அவர்களை பதவியிழக்கச் செய்தது.

மூன்று மாதங்களின் பின்னர் தனிமரமாக நின்ற கோட்டாவும் பதவி துறந்தார். இவரை நாட்டைவிட்டு ஓடுமாறும், தலை மறைவு வாழ்க்கை மேற்கொள்ளுமாறும், நாடோடியாகத் திரியுமாறும் ஒருவரும் கேட்கவில்லை. ராஜபக்சக்கள் மட்டுமன்றி இவரால் பிரதமர் கதிரை பெற்ற ரணில்கூட அப்படிக் கேட்கவில்லை.

ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் தாக்கியபோது பின்கதவால் பாய்ந்து சென்று கடற்படைக் கப்பலில் ஏறி தப்பியோடி மாலைதீவு, சிங்கப்பூர், தாய்லாந்து என்று திரிவ தன் காரணமென்ன? மகிந்த கூறியது போன்று இன்றுவரை இது மூடுமந் திரமாகவே உள்ளது.





இந்த நிலையில் அவர் தொடர்பாக வெளிவரும் செய்திகள் விசித்திரமானவை. அவர் இலங்கைப் பிரஜை. எப்போதும் நாடு திரும்ப முடியும், வெளியேறவும் முடியும். இதற்கு எவரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை. இவைகளை அலசிப் பார்க்கையில் சில கேள்விகள் எழுகின்றன.


கோட்டாபய உண்மையாகவே இலங்கை திரும்ப விரும்புகிறாரா? அதற்கான பாதுகாப்பை கேட்கிறாரா? அமெரிக்க கிறீன் கார்ட் பெற்று அங்கு செல்வதை அவர் விரும்பவில்லையா? அரசியலில் குள்ளநரி என வர்ணிக்கப்படும் ரணில், கோட்டாவின் மீள்வரவை மனதார ஏற்றுக் கொள்வாரா? இவற்றுக்கான பதில்கள் ஆயிரம் அமெரிக்க டாலர்களுக்குச் சமமானவை.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1) 2) 3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அ்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

கல்வி tv CHANNEL-1

**22.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**22.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# அரசாங்கத்துக்கு எதிராக திருமலையில் போராட்டம்!

திருகோணமலை, ஓக. 22

அரசாங்கத்தின் சட்ட விரோத நடவடிக்கைகளை எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்புப் பேரணியை நடத்தின.

இந்தப் பேரணி திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்தில் ஆரம்பித்து சர்வதேச நிலையத்துக்கு முன்னால் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில், பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய், அனைத்து போராட்டக்காரர்களையும் விடுதலை செய், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, மனித உரிமைகளை அங்கீகரி என்ற கோஷங்களை எழுப்பினர். (ஐ)

# பாராளுமன்ற உறுப்புரிமை கிடைத்தும் மக்களுக்கு உதவ களம் அமையவில்லை!

## கலையரசன் எம். பி. சொல்கிறார்

கல்முனை, ஓக. 22

**பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தாலும் எமது மக்களுக்கான சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய சரியான களம், சந்தர்ப்பம் அமையவில்லை. இருந்தும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மக்களின் பிரச்னைகளை முன்நிறுத்திச் செயல்பட்டு வருகின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.**

கல்முனையில் நேற்று விளையாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது பிரதேசங்களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. விளையாட்டை பொறுத்தவரை மைதானங்கள் இல்லாத நிலைக்கு மேலாக இருக்கின்ற மைதானங்களும் பல குறைபாடுகளுடன் உள்ளன. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார, அரசியல் சிக்கல் நிலைமைகளால் வாக்குறுதிகளை வழங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம்.

ஏனெனில், இந்த நாட்டிலே பெரும் நோய்த்தொற்று உருவாகி மக்களுக்கு சொல்லொணா துயரத்தைத் தந்தது. அது மட்டுமல்லாது ராஜபக்ஷ குடும்பத்தின் முறையற்ற ஆட்சியால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களால் நாட்டின் சகல இன மக்களும் வாழ்விழந்த நிலையில், பெரும்பான்மை சிங்கள மக்களாலேயே கொண்டுவரப்பட்ட கோட்டாபாய ராஜபக்ஷ அந்த மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டு ஏதோவொரு விதத்தில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமொன்று உருவாகியிருக்கின்றது.

இந்த அரசாங்கமும் நீடித்திருக்குமா என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் இருக்கும்போது எம்மால் வேலைத் திட்டங்கள் தொடர்பான வாக்குறுதிகளை வழங்க முடியாது. உண்மையில் எனக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தாலும் எமது மக்களுக்கான சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய சரியான சந்தர்ப்பம், களம் அமையவில்லை. இருந்தும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மக்களின் பிரச்னைகளை முன்நிறுத்தி அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே எனது பணிகளை மேற் கொண்டு வருகின்றேன் - என்றார். (ஐ)



# “ஒருநாளில் உன்னை மகிழ்விப்போம்” மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, ஓக. 22

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத்திட்டங்களை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதற்கமைவாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் மாவட்ட ரீதியில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

“ஒருநாளில் உன்னை மகிழ்விப்போம்” எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மதுரங்கேணி குளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது.

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகதருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ. குகதாசன் ஒருங்கிணைப்பில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரனின் வழிகாட்டலில் பிரதேசசெயலாளர் க. அருணன் தலைமையில், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அ. அழகுராஜ் ஏற்பாட்டில் குஞ்சங்குளம் ஆதிவாசிகள் கலாசார மண்டபத்தில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்ச்சி திட்டத்தின் கீழ், பெற்றோர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு திரையில் ஒளிபரப்பப்பட்டு, மகிழ்ச்சியான குடும்பம், இளவயது திருமணம், பாடசாலை கல்வி, மதுபாவனை பிரச்னை, பெற்றோர் வெளிநாடு செல்வது தொடர்பான தெளிவூட்டல் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் குஞ்சங்குளம், மதுரங்கேணி இருந்து 180 பெற்றோர்கள் 20 சமூக குழு உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுனில் ஹெந்துன்நெத்தி மட்டக்களப்பு பயணம்!

மட்டக்களப்பு, ஓக. 22

மட்டக்களப்பு - ஓட்டமாவடி பிரதேசத்துக்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துன்நெத்தி அங்கு மக்கள் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யு.எம். இஸ்மையில் தலைமையில் ஓட்டமாவடி பிரதேசத்தில் நடைபெற்ற சந்திப்பில் பிரதேச கல்வியலாளர்கள், உலமாக்கள், ஊர்பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் இடம்பெற்று வரும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன. அத்துடன், கட்சியின் வளர்ச்சி தொடர்பாகவும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் மக்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டது.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நிலைமை தொடர்பாகவும், நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பிலும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் நிலைப்பாடு தொடர்பிலும் முன்னாள் எம். பி. தெளிவுபடுத்தினார். (ஐ)

# கறுப்பு பொன் கற்களை விற்க முயன்றவர் கைது!

கல்முனை, ஓக. 22

புதையல் அகழ்வில் அகழ்ந்து எடுக்கப்பட்டது என்று கூறி கறுப்பு தங்கக் கற்ககளை விற்பனை செய்ய முயன்றவர் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவில் கோரக்களப்பு குளத்திற்கருகில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது.

இதில், 24 வயதுடைய கோமாரி பகுதியை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 350 துண்டுகள் அடங்கிய 113 கிராம் 180 மில்லி கிராம் எடை கொண்டகறுப்பு பொன்நிற கற்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ-01)





# திருமலையில் நெல் அறுவடை; விவசாயிகளுக்கு டீசல் வழங்கல்!

திருகோணமலை, ஓக. 22

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் டீசல் விநியோகமும் சீராக இடம்பெறுகிறது.

முள்ளிப்பொத்தானை எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக டீசல் விநியோகம் இடம்பெற்றது. கமநல அபிவிருத்தி நிலையம் ஊடாக ஓர் ஏக்கர் நிலப்பரப்பு தலா 10 லீற்றர் என்றவாறு சீரான விநியோகம் இடம் பெற்றது.

தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை கமநல சேவை அபிவிருத்தி நிலையங்கள் ஊடான முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு இந்த விநியோகம் இடம் பெற்றது.

இதனால், அறுவடை நேரங்களில் எந்தவித தடையு மின்றி இயந்திரம் ஊடாக நெல் அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர் பார்க்கப் படுகிறது. (ஐ)

# உலகம் முழுவதும் தொற்று அறுபது கோடியை கடந்தது!

நியூயோர்க், ஓக. 22

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 60 கோடியை கடந்துள்ளது. அத்துடன், கொரோனா மரணங்களும் 64 இலட்சத்து 70 ஆயிரத்தை கடந்து உயர்ந்துள்ளன.

நேற்று காலை 6 மணி வரையான 24 மணி நேரத்தில் 5 இலட்சத்து 46 ஆயிரத்து 98 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், தொற்றாளர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 60 கோடியே 3 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவில் இதுவரை 9 கோடியே 53 இலட்சத்து 24 ஆயிரத்து 830 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# பின்லாந்து பிரதமருக்கு போதை மருந்து சோதனை!



ஹெல்சிங்கி, ஓக. 22

பின்லாந்து பிரதமர் சானா மேரின் இரவு விடுதியில் நடனமாடிய காணொலி சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதைத் தொடர்ந்து அவருக்கு போதை மருந்து சோதனை நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு ஐரோப்பாவில் பின்லாந்து அமைந்துள்ளது. அந்த நாட்டில் 55.3 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். கடந்த 2019 டிசம்பர் 10ஆம் திகதி பின்லாந்தின் 46ஆவது பிரதமராக சானா மேரின் பதவியேற்றார்.

விற்பனை பிரதிநிதியாக வாழ்க்கையை தொடங்கிய அவர் மிக இளம் வயதிலேயே நாட்டின் பிரதமராக உயர்ந்தார். கடந்த 2020 ஓகஸ்டில் மார்கஸ் என்பவரை திருமணம் செய்தார். அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

கொரோனா பெருந்தொற்று, உக்ரைன் போர் உள்ளிட்ட பிரச்னைகளில் பின்லாந்தை திறம்பட வழிநடத்தியவர் என்று சானா மேரினுக்கு ஐரோப்பிய ஊடகங்கள் புகழாரம் சூட்டின.

இந்த நிலையில், இரவு விடுதியில் அவர் நடனமாடிய காணொலி சமூக வலைதளங்களில் அதிவேகமாக பரவி வருகிறது. அந்தக் காணொலியில் பின்லாந்து பாப் பாடகர் ஒலாவியுடன் பிரதமர் சானா மேரின் நெருக்கமாக நடனமாடுகிறார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் கூறும்போது, “நான் இளைய தலைமுறையை சேர்ந்தவள். கேளிக்கை விருந்தில் பங்கேற்றது உண்மை. மதுபானம் அருந்தி நடனமாடியதும் உண்மை. இவை சட்டபூர்வமானவை. போதை மருந்து எதையும் நான் உட்கொள்ளவில்லை” என்று விளக்கமளித்தார்.

எனினும் எதிர்க்கட்சி தலைவர்கள், அவரை தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர். மேலும், பல காணொலிகளும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து வெளிவந்தன. இதைத் தொடர்ந்து போதை மருந்து சோதனைக்கு அவர் தாமாக முன்வந்தார். இதையடுத்து அவருக்கு போதை மருந்து சோதனை நடத்தப்பட்டது. இதன் முடிவு ஒரு வாரத்தில் தெரியவரும். இந்த முடிவின் அடிப்படையில் சானா மேரினின் அரசியல் எதிர்காலம் அமையும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சோமாலியாவில் தாக்குதல் 20 பொது மக்கள் உயிரிழப்பு!

மொகடிஷ்,ஓக.22

**சோமாலியா தலைநகர் மொகடிஷ்வில் உள்ள பிரபலமான ஹயாத் ஹோட்டலுக்குள் நுழைந்து அல்-ஷபாப் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர்.**



பயங்கரவாதிகளுடன் 30 மணி நேரத்துக்கு மேலாக நடந்த கடும் சண்டைக்குப் பின்னர், அனைத்து பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டு நிலைமை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சோமாலிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சோமாலியா தலைநகரிலுள்ள பிரபலமான ஹயாத் ஹோட்டல் முன்பாக வெள்ளிக்கிழமை குண்டுகளை வெடிக்கச் செய்த அல்-ஷபாப் பயங்கரவாதிகள், தொடர்ந்து ஹோட்டலுக்குள் நுழைந்து அங்கிருந்த விருந்தினர்களை பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர்.

இதையடுத்து அங்கு வந்த சோமாலிய படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. சுமார் 30 மணி நேரம் இந்தச் சண்டை நீடித்தது. இதைத் தொடர்ந்து ஹோட்டல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வெள்ளிக்கிழமை இரவு மற்றும் சனிக்கிழமை முழுவதும் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஹோட்டலின் மேற்கூரை பெருமளவில் அழிக்கப்பட்டது. கட்டிடத்தின் கூரையில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதையும் புகை வெளியேறுவதைக் காட்டும் காணொலிகள் வெளியாகியுள்ளன.

இதுவரை, 12 பேர் இறந்ததை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். இறந்தவர்கள் பெரும்பாலும் விடுதியில் இருந்த பொதுமக்கள் என சோமாலிய உளவுத்துறை அதிகாரி முகமது நேற்று சனிக்கிழமை ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். எனினும், 20 பேர் கொல்லப்பட்டனர் என்று ஆதாரங்களை மேற்கோள் காட்டி உள்ளூர் ஊடகங்கள் உறுதி செய்துள்ளன.

விடுதியை கைப்பற்றிய பயங்கரவாதிகள் மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்ததோடு, விடுதிக்குள் படைத் தரப்பினர் நுழைய முடியாதவாறு படிக்கட்டுகளையும் குண்டுவீசி அழித்தனர். இதனால் படையினர் பல மணி நேரம் ஹோட்டலுக்குள் நுழைய சிரமப்பட்டனர்.

அல்-ஹைடாவின் துணை அமைப்பான அல்-ஷபாப் சோமாலிய அரச படைகளுடன் நீண்டகாலமாக மோதலில் ஈடுபட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புடினின் நெருங்கிய சகாவின் மகள் விபத்தில் பலி; சதி எனச் சந்தேகம்!

மொஸ்கோ, ஓக. 22

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நெருங்கிய கூட்டாளியான ரஷ்ய தத்துவஞானி அலெக்சாண்டர் டுகின் என்பவரின் மகள் தர்யா டுகினா பயணித்த கார் தீப்பற்றி எரிந்ததில் அவர் உயிரிழந்தார்.

மொஸ்கோவின் ஓடிண்ட்சோவ்ஸ்கி என்ற இடத்தில் இவர் பயணம் செய்த கார் நேற்று முன்தினம் திடீரென தீப்பற்றி எரிந்தது.

உயிரிழந்த தர்யா டுகினாவின் தந்தையான ரஷ்ய தத்துவஞானி அலெக்சாண்டர் டுகின் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நெருங்கிய கூட்டாளி ஆவார். புடினின் மூளை என்று அவர் வர்ணிக்கப்படுகிறார்.

ரஷ்ய தத்துவஞானி அலெக்சாண்டர் டுகினை இலக்குவைத்து இடம்பெற்ற சதி முயற்சியிலேயே அவரின் மகள் சிக்கி உயிரிழந்திருக்கிறார் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

தர்யா டுகினா விபத்தில் உயிரிழந்த காரி லேயே அலெக்சாண்டர் டுகின் பயணம் செய்யத் திட்டமிட்டிருந்தார். எனினும், கடைசி நிமிடத்தில் அவர் தனியாகப் பயணம் செய்யும் முடிவை எடுத்தார் என ரஷ்ய ஊடகமான 112 தெரிவித்துள்ளது.

வாகனம் எரிந்த இடத்திற்கு அவசர மீட்புக் குழுவினர் வருவதையும் காட்சிகளை டுகின் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பதையும் டெலிகிராமில் வெளியான காணொலிகளில் காணமுடிகிறது.

எனினும், இந்தக் கார் விபத்து சம்பவம் குறித்து ரஷ்ய அதிகாரிகள் இதுவரை எந்த வோர் அதிகாரப்பூர்வ தகவல்களையும் வெளியிடவில்லை. (ஐ)



உக்ரைனின் சுதந்திர தினம் நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், அந்த நாட்டைக் கைப்பற்ற ரஷ்யா போரை ஆரம்பித்தபோது கைப்பற்றப்பட்ட டாங்கிகள் தலைநகர் கீவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் மீது சிறுவர்கள் ஏறி விளையாடும் காட்சி...!

# உக்ரைன் சுதந்திர தினத்தை குழப்ப ரஷ்யா தாக்குதல்களை நடத்தலாம்!

கீவ், ஓக. 22

உக்ரைன் 31ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இந்நிலையில் அதனைக் குழப்பும் நோக்கில் ரஷ்யா தாக்குதல்களை நடத்தக்கூடும் என்பதால் இது குறித்து விழிப்பாக இருக்குமாறு உக்ரைனியர்களை அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

அண்மைநாட்களில் ரஷ்யா ஆக்கிரமிப்பு கிரீமியாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் மற்றும் ஜபோரிஸ்ஜியா அணுமின் நிலைய சூழலில் இடம்பெற்ற தாக்குதல்களில் 12 பொதுமக்கள் காயமடைந்தனர்.



இந்நிலையில், சுதந்திர தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையிலான ரஷ்யாவின் செயல்பாடுகளை உக்ரைனியர்கள் அனுமதிக்கக் கூடாது. விரக்தி மற்றும் பயத்தை ஏற்படுத்தும் ரஷ்யாவின் அசிங்கமான சதி முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# ஆசிய கிண்ண இருபது - 20 இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 22

ஆசிய கிண்ண இருபது - 20 தொடருக்கான 18 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண, நுவனிது பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் மூவரும் ஒரே அணியில் இடம் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

அணி விவரம்: தசூன் ஷானக (அணித் தலைவர்), தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, அசித பெர்னாண்டோ, அஷேன் பண்டார, ஜெவ்றி வெண்டர்சே, ப்ரமோத் மதுஷன், தனுஷ்க குணதிலக, பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், பானுக ராஜபக்ஷ, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, சாமிக்க கருணாரட்ன, துஷ்மந்த சாமீர, மஹீஷ் தீக்ஷன, பிரவீன் ஜயவிக்ரம. (ஐ)

# சின்சினாட்டி ரென்னிஸ் ஜெஸிகா பெகுலா தோல்வி

சின்சினாட்டி, ஓக. 22

சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில், அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா காலிறுதியில் தோல்வியடைந்தார்.

போட்டித்தரவரிசையில் 7ஆம் இடத்தில் இருந்த அவரை, பிரான்ஸின் கரோலின் கார்சியா 6-1, 7-5 என்ற செற்களில் தோற்கடித்தார். கார்சியா அரையிறுதியில், பெலாரஸின் அரினா சபலென்காவை சந்திக்கிறார்.

போட்டித்தரவரிசையில் 6-ஆம் இடத்திலிருக்கும் சபலென்கா, காலிறுதியில் 6-4, 7-6 (7/1) என்ற செற்களில் சீனாவின் ஜாங் ஷுவாயை வீழ்த்தினார்.



# ஆசிய கிண்ணம் ரி - 20 ஷாகின் அப்ரிடி விலகல்!

இஸ்லாமாபாத், ஓக. 22

ஆசியக் கிண்ண இருபது - 20 போட்டிக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து பிரபல வீரர் ஷாஹீன் அப்ரிடி விலகியுள்ளார்.

ஆசிய கிண்ணப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில், எதிர்வரும் 27 முதல் செப்ரெம்பர் 11 வரை நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்நிலையில் காயம் காரணமாக ஆசியக் கோப்பை இருபது - 20 போட்டியிலிருந்து ஷாஹீன் அப்ரிடி விலகியுள்ளார். இலங்கையில் டெஸ்ட் தொடரில் விளையாடியபோது ஷாஹீன் அப்ரிடிக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது.

அந்தக் காயம் இன்னும் குணமாகாததால் ஆசியக்



கிண்ணம் இருபது - 20 போட்டியில் மட்டுமல்லாமல் இங்கிலாந்துத் தொடரிலிருந்தும் அவர் விலகியுள்ளார். இதற்கடுத்ததாக இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பு நியூசிலாந்தில் நடைபெறும் முத்தரப்பு இருபது - 20 போட்டியில் ஷாஹீன் அப்ரிடி பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிம்பாவே அணியை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா!

ஹராரே, ஓக. 22

சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்ற இந்திய அணி தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

மூன்று 3 போட்டிகள் கொண்ட தொடரின் இரண்டாவது ஒருநாள் போட்டியில் நேற்று முன்தினம் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

சிம்பாவே அணி தனது இனிங்ஸில் 38.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 161 ஓட்டங்க்ள மட்டுமே எடுத்தது. அந்த அணியில் ஷோன் வில்லியம்ஸ் 42 ஓட்டங்களையும், ரியான் பர்ல் 39 ஓட்டங்களையும் சேர்த்தனர். இன்னசன்ட் கையா, ரஸா ஆகியோர் தலா 16 ஓட்டங்களை எடுத்தனர். எஞ்சிய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்திய தரப்பில் மிகச் சிறப்பாக பந்துவீசிய ஷர்துல் தாக்கூர் 3 விக்கெட்களை வீழ்த்தினார். சிராஜ், பிரசித், அக்சர், குல்தீப், தீபக் ஹூடா தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

162 ஓட்டங்கள் என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 25.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சஞ்சு சாம்சன் அட்டகாசமாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 43 ரன்கள் சேர்த்தார்.

ஷிகர் தவான், ஷுப்மன் கில் ஆகியோர் தலா 33 ஓட்டங்களையும், தீபக் ஹூடா 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இஷான் கிஷன் 6 ஓட்டங்களிலும், கே. எல். ராகுல் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அக்சர் பட்டேல் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். இப்போட்டியில் சஞ்சு சாம்சன் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.



# இங்கிலாந்துடனான டெஸ்ட் தென்னாபிரிக்கா வெற்றி!

லோர்ட்ஸ், ஓக. 22

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வந்த இந்த டெஸ்டில் இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 45 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா இரண்டாவது நாள் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்க அணி 89.1 ஓவரில் 326 ஓட்டங்களுக்குஅனைத்து விக்கெட்களையும் இழந்தது.

மார்கோ ஜேன்சன் 48, ரபாடா 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அன்ரிச் நோர்ட்ஜே 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஸ்டூவர்ட் பிரோட், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

161 ஓட்டங்கள்பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்ஸை விளையாடிய இங்கிலாந்து 37.4 ஓவர்களில் 149 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.



அதிகபட்சமாக அலெக்ஸ் லீஸ் 35, ஸ்ருவர்ட் பிரோட் 35 ஓட்டங்கள் எடுத்தனர். ஒல்லி போப் 5, ஜோ ரூட் 6, ஜானி பேர்ஸ்டோ 18, பென் ஸ்ரோக்ஸ் 20 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அன்ரிச் நோர்ட்ஜே 3 விக்கெட்களையும் ரபாடா, கேசவ் மகாராஜ், மார்கோ ஜேன்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இனிங்ஸ் மற்றும்12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

# அதிகாரத்தை உறுதிப்படுத்தவே சர்வகட்சி சூதாட்டம் தொடக்கம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 22

**அரசாங்கத்தின் அதிகாரமிக்கவர்கள் தமது சொந்த அதிகார நிகழ்ச்சி நிரலை ஸ்திரப்படுத்தும் வகையில் சர்வகட்சி சூதாட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு,

நாட்டு மக்கள், 2019ஆம் ஆண்டு சரியான முடிவை எடுத்திருந்தால், இன்று நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்காது. நாட்டையும் நாட்டு மக்களையும் நான் நெருக்கடிகளுக்குள் தள்ளாது சிறந்த ஆட்சியை முன்னெடுத்திருப்பேன்.

அரசாங்கத்தின் அதிகாரம் மிக்கவர்கள் தமது சொந்த அதிகார நிகழ்ச்சி நிரலை ஸ்திரப்படுத்தும் வகையில் இந்தத் தருணத்திலும் சர்வகட்சி சூதாட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டு மக்கள் உதவியற்றவர்களாக நிர்க்கதி நிலைமையை எதிர்கொண்டு இருக்கும் சூழலில், காகத்தின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?

முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. சம்பிரதாய எதிர்க்கட்சி என்ற வகிபாகத்திற்கு அப்பால் சென்று நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பணி தொடர்பில் மேலும் கலந்துரையாடும் விதமாக



அடுத்த வாரம் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம். நாட்டுக்கான எமது பொறுப்பை குறையின்றி நிறைவேற்றி வருகின்றோம் - என்றார். (கே)

## தொழிலுக்கு சென்றோர்மீது தாக்குதல் ஆறு பேர் காயம்; நான்கு பேர் கைது!

கொழும்பு, ஓக. 22

பொகவந்தலாவையில் இருந்து பலாங்கொடைக்கு தொழில்நிமித்தம் சென்றவர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்தினர் என்ற சந்தேகத்தில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலுக்கு சென்று மீள திரும்பியவர்கள்மீதே நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஐவர் பலாங்கொடை மருத்துவமனையிலும் ஒருவர் இரத்தினபுரி மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்த பஸ்ஸை பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து மறித்து சிலர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிய வந்தது. தாக்குதலை நடத்தியவர் அந்தப் பகுதியிலிருந்த வீடு ஒன்றின் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பின்னவல பொலிஸார் நடத்திய விசாரணையில் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 22

குடிபோதையில் வந்து சண்டை போட்ட கணவரை மனைவி தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மாத்தறை மாவட்டம் - வெலிகமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வல்லிவிலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

42 வயது நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குடிபோதையில் வீட்டுக்கு வந்த நபர் மனைவியுடன் சண்டை போட்டுள்ளார். ஆத்திரமடைந்த அவரின் மனைவி அவரை தாக்கியுள்ளார். இதில், தலையில் காயமடைந்த அவரின் கணவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

தாக்குதலை நடத்திய பெண் அங்கிருந்து தப்பியோடியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (கே)



## வீதியை திருத்தித் தருமாறு கோரி பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம்!

நுவரெலியா, ஓக. 22

பொகவந்தலாவை சிங்காரவத்தை தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியை திருத்தித் தருமாறு கோரி தோட்ட மக்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட சிங்காரவத்தை தோட்டத்தில் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சார்ந்த 1800இற்கும் மேற்பட்டவர்கள் வசிக்கின்றனர்.

பொகவந்தலாவை நகரத்திலிருந்து இந்தத் தோட்டத்துக்கு செல்லும் ஒன்பது கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி குண்டும், குழியுமாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது.

இந்தப் பாதையை நோயாளர்கள், கர்ப்பவதி தாய்மார்கள், முதியோர்கள் என அன்றாடம் தொழிலுக்கு செல்பவர்களும் பயன்படுத்துகின்றனர்.

வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் பாடசாலை மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 25 வருடங்களுக்கு மேல் பாதை சீர் செய்யப்படாத நிலை காணப்படுகின்றது. இந்த வீதியை திருத்தித் தருவதாக அரசியல்வாதிகள் உறுதியளித்தபோதிலும், அது சீரின்றிக் காணப்படுகின்றது. இந்நிலையிலேயே வீதியை திருத்தித் தருமாறு கோரி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)

## 1,000 லீற்றர் டீசல் கடத்தியவர் கைது!

கொழும்பு, ஓக. 22

ஆயிரம் லீற்றர் டீசலை சட்ட விரோதமாக கெப் ரக வாகனத்தில் கொண்டுசென்ற வரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பெலவத்தை பிரதேசத்தை சேர்ந்த 31 வயது நபரே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கெப் ரக வாகனத்தை வழி மறித்து சோதனை செய்த பொலிஸார் அதிலிருந்து ஆயிரம் லீற்றர் டீசலை கைப்பற்றினர். அத்துடன், சாரதியையும் கைது செய்தனர். இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## யாழ்ப்பாணம் மாநகர சபை கேள்வி அறிவித்தல் - 2022

மாநகர சபைக்குச் சொந்தமான நவீன சந்தை 2ஆம் கட்டடம் 143 ஆம் இலக்கக் கடை மற்றும் நவீன சந்தை உட்புறம் இலக்கம் 24 ஆகிய கடைகள் மாநகரசபையால் கேள்வி நடைமுறை ஊடாக குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா 1,000.00
கேள்விப்படிவம் விநியோகித்தல் - 22.08.2022 - 05.09.2022
மு.ப. 9.00 - பி.ப 2.30 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 06.09.2022 முற்பகல் 10.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 06.09.2022 முற்பகல் 10.00 மணிக்கு

| கடை இலக்கம் | மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| 143 நவீனசந்தை, 2ஆம் கட்டடம் | 54,000/- | 4,320,000/- |
| 24 நவீன சந்தை உட்புறம் | 30,000/- | 2,400,000/- |

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்,**
**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

## ஐ. எம். எவ்...

தல்படி, நாட்டின் மொத்த கடன் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களாகும். இதில் 44 சதவீதமானவை கடந்த ஆண்டு இறுதி வரை சீனாவிடம் இருந்து வாங்கிய தொகையாகும்.

அத்துடன், ஜப்பானிடம் 32 சதவீதமும், இந்தியாவிடம் 10 சதவீதமும் கடன்களாக பெறப்பட்டுள்ளன. தென் கொரியா மூன்று சதவீதத்திலும், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும், ரஷ்யா, ஹங்கேரி, சுவீடன், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலா இரண்டு சதவீதத்திலும் உள்ளன.

மீதமுள்ள ஒரு சதவீத கடன், சவூதி அரேபியா, அமெரிக்கா, குவைத், ஸ்பெயின் மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு வழங்கியவையாகும். இதில், அரசாங்கம் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் இரு தரப்பு கடன் 3 பில்லியன் டொலர்களாகும்.

இந்த வெளிநாட்டு நாணய கடனுக்கான வட்டியாக சராசரியாக 2.9 சதவீதம் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் உள்ளூர் நாணயக் கடனுக்கான வட்டி வீதம் 9.3 சதவீதமாக உள்ளது. எனினும் வெளிச் சந்தைக் கடன்கள் - சர்வதேச பிணை பத்திரங்கள் என்பன நிதி அமைச்சின் கடன் விளக்கங்களில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் அடுத்த கட்டம், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களை இறுதி செய்வதாகும் என்று நிதி அமைச்சு கூறுகிறது.

இதனைத் தொடர்ந்து, கடன் வழங்குநர்களைப் புதுப்பிக்க ஒரு பொது முதலீட்டாளர் கடன் விளக்கத்தை தயாரித்து, சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் நிலை ஒப்பந்தத்தை எட்டுவதாகும்.

சர்வதேச நாணய நிதிய குழுவின் அனுமதியைப் பெறுவது மிகவும் முக்கியமானது. இதற்கு முன்னர், கடன் கொடுத்தவர்களுடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதே இறுதி கட்டமாக இருக்கும்.

இந்தநிலையில், பொருளாதார மற்றும் நிதி மறுசீரமைப்பு மற்றும் கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக, சர்வதேச நாணய நிதிய பணியாளர்கள் எதிர்வரும் 24 -31 வரை கொழும்புக்கு வருவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டின்...

எம். பி.

மேலும், தற்போதைக்கு அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“நான் அரசியலில் இருப்பேன். உரிய நேரத்தில்தான் ஓய்வுபெறுவேன். அது வரை நான் போகமாட்டேன்”, என்று அவர் கொழும்பு ஆங்கில நாளிதழான சண்டே ரைம்ஸுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். எனினும், கட்சியை வழிநடத்த நான் தேவையா என்பதை சிறீலங்கா பொதுஜன பெரமுனவே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ செய்ய வேண்டியதை முடித்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அவர் ஓர் அரசியல்வாதி அல்ல. நாட்டை விட்டு செல்வதற்கு முன் அவர் என்னிடம் ஆலோசித்திருக்கவில்லை. அவர் சென்றிருக்கக்கூடாது.

ஆனாலும், அவர் முடிவு செய்து விட்டே, ‘நான் போகிறேன்’ என என்னிடம் கூறினார். நான் அதற்கு பதிலளிக்கும் வகையில் எதுவும் சொல்லவில்லை. நான் போகலாமா என்று அவர் என்னிடம் கேட்டிருந்தால் நான் இல்லை போகாதே என்றே சொல்லியிருப்பேன் - என்றும் கூறினார்.

தவிர, நாட்டின் அனைத்து நெருக்கடிகளுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பல்ல. இதற்கு நான் மற்றும் முந்தைய அரசாங்கங்கள் உட்பட அனைவரும் பதில் சொல்ல வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, அவர் (கோட்டாபய) தான் நம்பிய நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் செயல்பட்டார். எனவே, அவரைக் குறை கூற முடியாது. (இதில் மத்திய வங்கியின் முந்தைய ஆளுநர்கள் குறிப்பிடப்படுகின்றனர்).

அவர் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது சிறந்த நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தினார். ஜனாதிபதியாக அவர் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளானார். முன்பெல்லாம் அவர் ஒரு கடும்போக்குவாதியாக இருந்தார். ஜனாதிபதியானவுடன் அவர் மென்மையாக மாறினார். அவர் செய்ததை தொடர்ந்தும் செய்திருக்கக்கூடாது, ஆனால் அவர் அரசியல்வாதி அல்ல. எவ்வாறாயினும், அவர் முன் இருந்த பணியை சரியாக முடித்திருக்க வேண்டும் என்றார்.

மேலும், “விரைவான பொருளாதார மீட்சியைக் கொண்டு வரக்கூடிய ஒரேயொரு திறமையான நபர் ரணில் மட்டுமே. அதனால்தான் நான் அவர் பதவி ஏற்றதை ஆமோதித்து அவருக்கு எனது ஆதரவை தெரிவித்தேன்” என்றார். (ஐ)

## முடிந்தால்...

யாருக்கும் இலவசமாக உணவளிக்க முடியாது - ஏதாவது செய்ய வேண்டும். என்னாலும் இலவசமாக சாப்பிட முடியாது, இந்த நாட்டை முன்னேற்றாவிட்டால் நானும் வெளியேற வேண்டும். எனவே, முதலில் கிராமத்தில் இருந்து ஆரம்பிக்கலாம்.

“அரசாங்கத்திடம் இருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கக்கூடாது. இப்போது அரசாங்கத்தின் மூலம் வாழும் காலம் முடிந்துவிட்டது. இந்தப் பொருளாதார பிரச்னைகளுக்கு அரசியல்வாதிகள் தீர்வு காண வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் அதை செய்ய வேண்டும். ஒன்றிணைந்து இந்த அழுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். அந்த செய்தியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

“பழைய அரசியலை கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை. பாராளுமன்றத்தில் கட்சிகளை மாற்றினால் நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும் என மக்கள் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த இளைஞர்கள் வந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நான் அதனை அமைதிப் போராட்டம் என்கிறேன். பிற்காலத்தில் மற்றவர்கள் அதை வன்முறைப் போராட்டமாக மாற்றினர். ஏன் இந்தக் குழு இங்கு வந்தது? இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டும். இதை விட்டுவிடாதீர்கள். தேர்தல் இருக்கிறது என்று ஓடிவிடாதீர்கள். அதற்கு முன்னர், முன் வந்து இந்த வேலையைச் செய்யுங்கள்.

“இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டனர். சுதந்திரம் பெற்ற பிறகுதான் பிரிந்தனர். இப்போது நமக்கு முன்னால் ஒரு கடினமான காலம் உள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். சுதந்திரம் பெற இடதுசாரி தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். முதல் எதிர்க்கட்சித் தலைவர் என். எம். பெரேரா ஆவார். பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். நாம் அனைவரும் மீண்டும் இணைந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.”

மேற்கண்ட விடயங்களை நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் உரையாற்றியபோது ஜனாதிபதி தெரிவித்திருந்தார். (ஐ)

## இருண்ட நாளை...

வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன். அவர்களின் தடுப்புக் காவலில் கையெழுத்திட வேண்டாம் என்று நான் ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொள்கிறேன், அவ்வாறு செய்வது இலங்கைக்கு ஒரு இருண்ட நாளாக இருக்கும்”- என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# 2030ஆம் ஆண்டு வரை ரணிலே ஜனாதிபதி!

## பாலித ரங்கே பண்டார

கொழும்பு, ஓக. 22

நாட்டின் ஜனாதிபதியாக எதிர்வரும் 2030ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிப்பார். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. எனவே, சகல கட்சிகளும் எவ்வித பேதமும் இன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐ. தே. க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவே எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகவே பதவி வகிப்பார். அதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது. ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிச் சென்று உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை.

அதேபோன்று எந்தவோர் அரசியல் தலைவரும் வெற்றியடைந்ததில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் பேசுவது பிரயோசனமற்றது. ஏனைய கட்சிகளுக்கும் அதே நிலைமையே ஏற்படும். நாட்டில் பல்வேறு பௌத்த மகா சங்கங்கள் காணப்படுகின்ற போதிலும் , மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்கள் தொடர்பிலேயே அனைவரும் பேசுகின்றர்.

அதே போன்றுதான் இலங்கையிலும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திர கட்சி ஆகியவை மாத்திரமே ஸ்திரமான கட்சிகளாகவுள்ளன.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனித்துச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிக்க முடியும். எவ்வித பேதங்களும் இன்றி அனைவரையும் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இன, மத, மொழி பேதமின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்நாட்டின் பிரஜையாவார். அவரின் திறமையற்ற நிர்வாகம் மற்றும் பலவீனத்தின் காரணமாகவே நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அவருக்கு இங்கு வசிப்பதற்கான உரிமை காணப்படுகிறது. அதற்கமைய நாட்டின் தலைவர்கள் என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு காணப்படுகிறது.

அரசியலமைப்பிற்கமைய பிரஜைகள் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரச தலைவர் நிர்பந்திக்கப்பட்டுள்ளார். அது கோட்டாபய ராஜபக்ஷவாகவும் இருக்கலாம். மஹிந்த ராஜபக்ஷவாகவும் இருக்கலாம். வேறு பிரஜைகளாகவும் இருக்கலாம் - என்றார். (ஐ)

# இன்றைய மின்வெட்டு நேரம்!

கொழும்பு, ஓக. 22

நாட்டில் இன்றைய தினமும் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஏ முதல் எல் மற்றும் பி முதல் டபிள்யு வரையான வலயங்களில் காலை வேளையில் 1 மணித்தியாலமும் 40 நிமிடங்களும், இரவு வேளையில் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்களும் மின் துண்டிக்கப்படவுள்ளது.

இதேநேரம், கொழும்பு முன்னுரிமை வலயங்களில் காலை 5.30 மணி முதல் 8.30 மணிவரையான காலப்பகுதியில் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

இதுதவிர, எம். என். ஓ, எக்ஸ், வை, இசற் வலயங்களில் அதிகாலை 5 மணி முதல் காலை 8 மணிவரையான காலப் பகுதியில் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## உணவின்றி...

படகு ஒன்றில் கொண்டுவரப்பட்டு மணல் தீடையில் இறக்கிவிடப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

தம்மிடம் மூன்று லீற்றர் தண்ணீர் மட்டுமே இருந்ததாக நேற்று மீட்கப்பட்ட அவர்கள் இந்திய கடற்படையினரிடம் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட அவர்கள் கடலோர காவல் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பப்படுவார்கள் என்று தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் பின்னர் இதுவரை 134 பேர் அகதிகளாக இந்தியா சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தமை தெரிந்ததே. (ஐ)

## அமெரிக்க...

தாகக் கூறப்படுகின்றது.

இதனால், கோட்டாபய கிறீன் கார்ட் வீசாவுக்கு விண்ணப்பித்தாலும் அதனைப் பெறும் வாய்ப்பை இந்த வழக்குப் பாதிக்கும்.

அமெரிக்க நீதிமன்றத்தின் முன்பாக கோட்டாபய ராஜபக்ஷ குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால், அமெரிக்க அரசாங்கம் தனது குடிமக்களை அந்த முடிவுக்கு உட்படுத்த தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்த முடியும் - என்று சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ- சி)

## ரூ.340...

மண்ணெண்ணெய் முன்னர் 87 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நாட்டில் எரிபொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவிய நிலையில் மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஏனைய எரிபொருட்கள் தற்போது ஓரளவுக்கு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் மண்ணெண்ணெய்க்கான தட்டுப்பாடு நீடிக்கின்றது.

இந்த நிலையில், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 253 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 340 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சப்புகஸ்கந்தையில் எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் விரைவில் மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# செப். 20ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அறிவிப்பு



கொழும்பு, ஒக. 22

**உள்ளூராட்சி தேர்தலை நடத்துதல் மற்றும் காலம் தாழ்த்துதல் குறித்த அதிகாரங்கள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். எனவே, அது தொடர்பான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். அத்துடன், செப்ரெம்பர் 20இற்குப் பின்னர் வெகுவிரைவில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல்களை நடத்துவதற்கே தேர்தல்கள் ஆணைக்குழு காணப்படுகிறது. எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு சட்ட ரீதியாக எம்மிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அதனை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

மாகாணசபை தேர்தல் நீண்ட காலமாக காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. எனவே, அதனை விரைவில் நடத்த வேண்டும் என்று நாம் அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

தெரிவுக்குழு சந்தர்ப்பங்களின் போதும் , இந்த தேர்தல் சட்டம் குறித்து நாம் கடுமையாக வலியுறுத்தியிருந்தோம். அதற்கமைய பாராளுமன்றத்தில் தற்போது பழைய முறைமையில் சிறு சட்ட திருத்தங்களுடன் தேர்தலை நடத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல்களும் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. அமைச்சரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தலை காலம் தாழ்த்துவது தொடர்பில் அமைச்சருக்குள்ள அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு கோருகின்றோம்.

காரணம் அமைச்சரால் நன்மைக்காக தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அது அரசியல் நோக்கத்திற்காக என்றே தென்படும். எனவே தான் அந்த சட்டத்தில் மாற்றங்களை மேற்கொண்டு, அதிகாரத்தை ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு கோருகின்றோம். எதிர்வரும் மார்ச் மாதம் வரை உள்ளூராட்சி தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதியின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெறும். அதற்கமைய விரைவில் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஐ)



# ஒரு கோடி ரூபாய்க்கும் மேலான போதைப் பொருளுடன் இருவர் கைது!

புத்தளம், ஒக. 22

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றிய பொலிஸார், இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளனர்.

புத்தளம் - கற்பிட்டி பகுதியில் விற்பனை செய்வதற்காக பொதி செய்து கொண்டிருந்தவேளை பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பிலேயே இந்தப் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதன்போது சுமார் 800 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணை இடம்பெறுவதாகவும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# பசு மாடு உதைத்ததில் முதியவர் ஸ்தலத்தில் பலி!

மட்டக்களப்பு, ஒக. 22

பால் கறந்தபோது பசு மாடு உதைத்ததில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - வெல்லாவெளி - களுதாவளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த நாகமணி பாக்கியராசா (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

முதியவர் வழக்கம்போன்று வளர்ப்பு பசுவில் பால் கறந்துள்ளார். திடீரென்று பசு அவரின் நெஞ்சில் காலால் உதைத்ததில் அவர் சம்பவ இடத்திலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# பிரான்ஸில் போராட்டங்களை ஏற்பாடு செய்தவர் கைதானார்!

கொழும்பு, ஒக. 22

கோட்டா கோ கம போராட்டங்களை பிரான்ஸ் நாட்டில் நடத்த ஏற்பாடு செய்த நபர் இலங்கை வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அர்ஜூன அமடொரு என்ற பிரான்ஸ் குடியுரிமை பெற்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது குடும்ப அங்கத்தவர்களை சந்திப்பதற்காக இலங்கை வந்த நிலையில் நிட்டம்புவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது

## சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

புதுடிலில்லி, ஒக. 22

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிகவும் கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலால் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை மாறாக அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை தன்னிச்சையாக கைதுசெய்வதும் அவர்களின் நடவடிக்கைளால் நியாயப்படுத்த முடியாத பாரிய குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது சுமத்துவதும் சர்வதேச சட்டத்திற்கு முரணாண விடயம் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# பெரும்போகத்துக்கான உரம் யாழில் விநியோகம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பெரும்போகத்துக்கு தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் சிறுபோக செய்கை முன்னெடுக்கப்படாத நிலையில் பெரும்போக செய்கை ஆரம்பமாகவுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் எம். எல். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுபோகத்தில் நெல் செய்கைக்குத் தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள், தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்திய கடன் வசதியின் கீழ் நாட்டிற்கு கிடைத்துள்ள 21,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை, தேயிலை மற்றும் இஞ்சி செய்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுதேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையூடாக, தேயிலை செய்கையாளர்களுக்கான உர விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது. (ஐ)

# கோழி இறைச்சிக்கும் விலை நிர்ணயிக்க முடிவு

கொழும்பு, ஒக. 22

கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்த வாரத்தில் எட்டப்படும் என வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக்கொண்டால், கட்டுப்பாட்டு விலை அவசியமில்லை என்று அவர் கூறினார்.

கடந்த இரண்டு வாரங்களில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் மற்றும் பல நுகர்பொருட்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. சில்லறை விலை எதிர்வரும் நாட்களில் குறையும்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் முட்டைக்கான ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதன்படி, வெள்ளை முட்டைக்கு 43 ரூபாயும், சிவப்பு முட்டைக்கு 45 ரூபாயும் அதிகபட்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக 60 ரூபாயை விட அதிகமான விலையில் முட்டை விற்பனை செய்யப்பட்டமையை அடுத்து கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கோழி முட்டை 60 ரூபாயாக அல்லது இதற்கும் அதிகமான விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துணையாளர் யாழ் பாவாணண்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-டிக் பிறதர் சாகசம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா - வைத்தியர் சத்தியமூர்த்தி



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் நிலி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு